நம்மோடு கலந்துவிட்டார்

N. SABHAPATHI, B.A.
NEWS AGENT,
KUMBAKONAM.

நெஞ்சிலே நெருப்பு, கண்களில் நீர்த்துளிகள், கரத்திலே நடுக்கம், கருத்திலே திகைப்பு—இந்நிலையில், தமிழகத்துக்கு, திராவிடச் சமுதாயத்துக்கு, பகுத்தறிவினருக்கு, ஈடு செய்ய முடியாத இழப்பினை, ஆறுதல் பெறமுடியாத துயரத்தினைக் குறித்துத் தீட்டிட முனைகிறேன்—முடியாமல் திகைக்கிறேன்.

சுழல்புயல் சூறாவளியையும்கண்டு அஞ்சாது, கலங்கரை விளக்கொளி கண்டு, உறுதியுடன் உற்சாகமூட்டியவண்ணம், பாறைகளிலே மோதிடா வண்ணம் கலத்தைச் செலுத்திவரும், தலைவன், கலத்திலிருப்போர், இவர் தம் நெஞ்சுரம் நம்மைக் கரைகொண்டு சேர்க்கும். இவர் திறன், வெற்றி புரிந்து நம்மை அழைத்துச் செல்லும் என்று நம்பிக்கையுடன் இருந்திடும் வேளையில், இவர்போல் கலங்கா உள்ளமும் நெறி அறியும் நேர்த்தியும், அஞ்சாமையும், அயராமையும் கொண்டவர், வேறு எங்கே இருக்கப் போகிறார் என்று கலத்திலிருப்போர், இறுமாந்து கூறிய வேளையில், கலத்தைச் செலுத்திச் செல்லும் காவலன், கண்களிலே ஒளி தோன்ற, கலத்திலிருப்போரை எல்லாம் ஒருமுறை பார்த்துவிட்டு, புன்னகை பூத்தமுகத்துடன், கீழே வீழ்ந்து, பிணமானால், கலத்திலிருப்போர் என்ன நிலை பெறுவரோ, அந்நிலை பெற்றனர் சுயமரியாதைக்காரர்கள், பட்டிவீரன் பட்டி பாண்டியனாரின் திடீர் மறைவு கேட்டு. எதிர்பாராத தாக்குதல் ஈடு செய்யமுடியாத இழப்பு, துடைத்திட முடியாத் துயரம், ஆறுதல் பெறமுடியாத் துக்கம்—நெஞ்சிலே எரிமலை, கண்களிலே அருவி, மக்களெல்லாம்.

நண்பர்களே! திராவிடரே! பகுத்தறிவு இயக்கத் தோழர்காள்! பாண்டியனைப் பறிகொடுத்துவிட்டோம்—ஒளியை இழந்துவிட்டோம்—தலைவனை இழந்துவிட்டோம்.

பாண்டியன் மறைந்தார் — பகுத்தறிவுச் சிங்கம் சாய்ந்துவிட்டது—தன்மான இயக்கத்தலைவர் இறந்துபட்டார்—திராவிட இயக்கச் செம்மல் மறைந்துவிட்டார்.

எந்தப் பாண்டியனைப் பற்றி எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும், நமக்கெல்லாம் புதியதோர் நெஞ்சுரம் பிறந்ததோ, எந்தப் பாண்டியனாரைக் கண்டவுடன் நமக்கெல்லாம் புதியதோர் வீர உணர்ச்சி கொழுந்துவிட்டதோ, எந்தப் பாண்டியனாரின் பண்புகளை எண்ணிடும் போதெல்லாம், பழுதுபட்ட குணத்தினர் வெட்கமடைந்தனரோ, எந்தப் பாண்டியனாரின் வீரதீரச் செயலைப் பற்றிக் கேள்விப்பட்டு, கூனன் நிமிரவும், குருடன் பார்வை பெறவும், கோழை வீரம் பெறவும் முடிந்ததோ, அந்தப் பாண்டியன், ஐயகோ! இறந்து போனார்—நம்மை, நாட்டை, நமது இயக்கத்தைத் துக்கத் தீ சுட்டுத் தள்ளுகிறது—அவர் மறைந்து போனார்—துளியும் எதிர்பாராதபோது—எவருக்கும் ஆறுதல் கிடைக்கமுடியாத நிலையில்.

ஆம்! பாண்டியன் மறைந்தார்—பெருமலை சாய்ந்தது.

மரணம்—செச்சே—எத்துணை கொடுமைக் கணைகளை ஏவும் யந்திரம் இது—இதன் பொறியில் சிக்காமலிருக்க இயலாது, எவரும்—எனினும், எத்துணை எத்துணை இதயப் புண் ஏற்பட்டுவிடுகிறது, இந்தக் கொடுமை மிக்க பொறியினால்.

தவிர்க்கமுடியாததும், அகற்றமுடியாததும், என்றேனும் ஓர்நாள் முடியுடை வேந்தனையும் சடை அணிவோனையும், எவரையும் தீண்டித் தீர்த்துவிடும் பொறிதான் இது—புரிகிறது—விளக்கம் அறிய முடிகிறது—எனினும், எனினும்........

முடிவிலோர் பிடி சாம்பலாவர்—பாடுகிறார்கள், கேட்டிருக்கிறோம்—புரியத்தான் செய்கிறது—எனினும், எனினும்!.....

அழுது அழுது புரண்டாலும், மாண்டார் வாரார்—உண்மை—மிக மிகச் சாமான்யர்களுக்கும் எளிதாகப் புரியக் கூடிய உண்மைதான்—எனினும், எனினும்......நெஞ்சிலே புகுந்து விடும் நெருப்பு அணைய மறுக்கிறது—அதிலும் பாண்டியனாருக்கு ஏற்பட்ட மரணமோ, இன்று, அல்லது நாளை, காலை அல்லது இரவு, ஈளை, இல்லை, இருமல், இழுப்பு கூடவே வலிப்பு, என்று குறிப்பற்ற பேச்சும், கூடிக்கூடி உசாவுவதுமான நிலைக்குப் பிறகு ஏற்பட்டதா! அந்தோ! இல்லை, இல்லை! மரணப் படுக்கையில் அந்த மாவீரன் நாள் பல படுத்துக்கிடந்தவரல்ல. மரணத்தின் பிடியில் சிக்கிவிட்டார், இனித் தப்புவதற்கில்லை, என்று பலரும் பேசிக்கொள்ளும் விதமான நிலைமைக்குப் பிறகு அல்ல, அவர் இறந்துபட்டது—அழகொளி வீசி வந்த திருவிளக்கை, மந்தியொன்று திடீரெனத் தாவிச் சென்று அணைத்திடுவதுபோல, மரணம் அவரைத் தொட்டுவிட்டது—கொட்டிவிட்டது. எங்ஙனம் மனம் ஆறுதல் பெற இயலும், எவரால் இயலும்!

பத்து நிமிடங்களில் வந்துவிடுவார் — அறிவகத்தைக் கண்டு அகமகிழ்வார்—உழைத்திடும் உத்தமரல்லவா அவர், எனவே நமது உழைப்பின் உருவம் கண்டு உளம் களிப்பார், தோட்டம் சென்று காண்பார், கூடத்தில் உலவுவார், மாடி சென்று மகிழ்வார், ஆடிடும் கொடியினைக் கண்டு களிப்பார், பெருமையோடு நம்மைப்பார்த்துப் புன்னகை புரிவார், பூரிப்புடன் அவருடன் உரையாடப் போகிறோம், இதோ, இன்னும் சிறிது நேரத்தில், என்று எண்ணியபடி, நானும் நண்பர் நெடுஞ்செழியனும், வில்லாளனும், ஜனவரித் திங்கள் பதினாறும் நாள், பிற்பகல், சென்னையில் நமதியக்க பணிமனையில், அறிவகத்தில், அவர் வரவு நோக்கிக் காத்திருந்தோம் — அவர் அதுபோதுதான், நெஞ்சுவலியால் தாக்குண்டு, மருத்துவமனை அழைத்துச் செல்லப்பட்டார், என்ற செய்தியை அரைமணி நேரம் கழிந்தே அறிந்தோம்—வருந்தினோம்—கவலைப்படக் காரணமில்லை, கலக்கமூட்டும் நிலை இல்லை என்றும், சில நாட்கள் ஓய்வு மட்டுமே தேவை என்றும், மகிழ்வூட்டும் செய்தி கிடைத்தது; மறுதினம் மரண ஓலையைப் பிறகு கண்டோம், மனம் உடையாமலிருக்கமுடியுமா? எத்துணை திடீர்த் தாக்குதல்! எத்தன்மைய பெரும இழப்பு!

கண்டோர் வியக்கும் உடற்கட்டு, கடும் உழைப்புக்கு ஈடுகொடுக்கும் வலிவு, எவ்வளவு பெரிய இடுக்கணையும் கண்டு கலங்காத திடமனம்—இவையல்லவா, பாண்டியன்—இந்தப் பாண்டியனா, படுத்தார் இறந்துபட்டார், என்ற திடீர்மரணச் செய்திக்கு இருப்பிடமாகக் கூடியவர்? அதோ தெரிகிறதே அந்த வீர உருவம்—அந்தப் புன்னகை — கனிவு—கண்களிலே கனிவு—தெரிகிறது, அவர் மறைந்து விட்டார். இறந்துபட்டார், என்றால், மனம் பாடுபடத்தானே செய்யும்.

தாழ்ந்து கிடந்த தமிழகத்துக்கு, மறைந்த மாவீரன் ஆற்றிய பணிகளின் பட்டவனை பெரிது, தன்மை மிக உயர்தரமானது.

முப்பதாண்டுகளுக்கு மேலாக அந்த முடிசூடா மன்னன், மாற்றாருக்குப் புயலாகவும், நண்பர்களுக்குத் தென்றலாகவும், உழைப்பாளிகளுக்கு உறுதுணையாகவும், எத்தர்களுக்கு எதிரியாகவும், இருந்தாற்றிய அரும் பணியினால் சமுதாயம் புதியதோர் பொலிவு பெற்றது. அவர் உரை கேட்டு மட்டுமல்ல, அவர் செயல் கண்டு, எண்ணற்ற இளைஞர்கள், அவரைத் தங்கள் தலைவர் என்று, மகிழ்வுடன் கொண்டனர். பாண்டிய மண்டலத்திலே மிக அதிகமாகவும், பிறமண்டலங்களிலே, குறிப்பிடத்தக்க பெரும் அளவுக்கும், மாவீரன், பரணிபாடி, தரணி ஆண்ட தமிழன் அடைந்திருக்கும் தாழ் நிலையினை எடுத்துக் கூறி, தன்மானத்தின் மேம்பாட்டினை அறிவுறுத்தி வந்தார். அவர் வருகிறார் ஓர் நகருக்கு என்றால், இயக்கம் புது முறுக்கு அடைந்து விட்டது என்று பொருள். அத்துணை அருமையான தொண்டாற்றி வந்தார், மக்களின் மனப்போக்கு மாறுதலடைவது கண்டு மகிழ்ந்தார், அறிவு மணம் கமழக்கண்டார், ஆற்றலுக்கு தக்க பலன் பூத்திடக் கண்டார், பூரிப்படைந்தார் — மனதிலே மேலும் பல திட்டங்கள் வகுத்துக் கொண்டிருந்தார், மேலும் நாட்டுப் பணியாற்ற, அவருடைய அறிவாற்றலைத் திராவிடர் பெற இருந்தனர் புதியதோர் வேகத்துடனும் அளவுடனும், அத்தகைய வேளையிலே, மறைந்துபட்டார் — திராவிடச் சமுதாயம் மிகப் பெரிய வாய்ப்பை இழந்து விட்டது.

செல்வக் குடி பிறந்த பாண்டியன், காடுகளைக் கழனிகளாக்கி, கட்டாந்தரைகளைப் பூந்தோட்டமாக்கி, பாம்பு புரளுமிடத்தையும், புலிக்குகை உள்ள மலையையும், தித்திக்கும் கனி குலுங்கும் பண்ணைகளாக்கிய பெரும் உழவர். மிகக் கடுமையான உழைப்பைக் களிப்போடு ஏற்று நடத்தி, வேளாண்மை எனும் பண்புள்ள சொல்லுக்கு இலக்கியமாக விளங்கிவந்தார். வீரத் தலைவனை அல்லவா நாம் இழந்துவிட்டோம்.

தமிழகத்திலே, பெரியார், சுயமரியாதை இயக்கத்தைத் துவக்கினார், மக்களிடை புதியதோர் விழிப்பு மலர்ந்தது. யாருடைய பிரச்சாரத் திறனும், ஓயா உழைப்பும், உயர்தரமான அறிவாற்றலும், தமக்குப் பயன்படுமென்று அரசியல் சூதாடிகள் எண்ணி வரவேற்று, உபசரித்து, முகமன் கூறி, முறுவல் காட்டினரோ, அந்தப் பெரியார், அரசியல் சூதாடிகளுக்கு அல்ல என் உழைப்பு, மக்களைச் சுயமரியாதைக்காரர்களாக்கவே, ஜாதிக் கொடுமைகளைத் தகர்க்கவே, மத மடைமைகளை அழிக்கவே பயன்படும் என்று கூறினார். சுயமரியாதை இயக்கம் துளிர்த்தது. சூது மதியினர் மிரண்டனர், மட அதிபர்கள் மிரட்டினர், பணம் படைத்தோர் பதைத்தனர்; புராண மேதைகள், பூசுரத் தலைவர்கள் புருவங்களை நெறித்தனர், யாரார் பெரியாருடைய போற்றல் தமக்குப் பயன்படும் என்று ஆசை கொண்டனரோ, அவர்களெல்லாம், அரசியல் சூதாடிகளெல்லாம், எதிர்ப்பாளராயினர்; அத்தகைய சூழ்நிலையில், பட்டிவீரன்பட்டி பாண்டியனார், பெரியார் பக்கம் நின்றார்! அவர் விரும்பியிருந்தால், மாளிகையிலே 'மந்த காச' வாழ்வு நடத்திக்கொண்டிருந்திருக்கலாம்—ஆனால், அவர், கல் வீச்சும், அதைவிடக் கடுமையான சொல் வீச்சும் மிகுந்திருந்த சுயமரியாதை இயக்கத்தில் புகுந்தார்—உற்சாகத்தோடு. பணபலம் படைத்தவர்களின் பகைக்கு நடுவே சிக்கிக்கொண்ட சுயமரியாதை இயக்கம் எங்கே தப்பிப் பிழைக்கப்போகிறது என்ற அச்சம் சூழ்ந்திருந்த வேளையில், பாண்டியன் பரணி பாடினார், வேடதாரிகளை விரட்டினார், சனாதனத்தைச் சாடினார், சீறிப் போரிட்டார், பெரியாரின் பக்கம் நின்று, சுயமரியாதை இயக்கம் வேரூன்ற,

(10-ம்பக்கம் பார்க்க)

திராவிடநாடு

மலர் 11 | விலை 2 அணா | இதழ் 35

பாண்டியனார் துக்க ஏடு

பாண்டியனாரே, உம்மை இனி பார்க்கப்போறோமோ?

'பாண்டிய மண்டலம்' என்ற சொற்றொடர் செவியில் விழும் போதெல்லாம், பண்டு ஆண்ட பாண்டிய மன்னரின் நினைவே, பலருக்கும் வரும்; அம் மன்னர்களின் அறிவும் ஆற்றலும், அவரது ஆட்சியின் சீரும் சிறப்பும், அவரது நாட்டின் வளமும் வனப்பும் பலரின் மனக்கண்முன்னே தோன்றி மறையும்; பூரிப்பும், பெருமையும் பலரும் கொள்வர். ஆனால், 'பாண்டிய மண்டலம்' என்ற அந்தச் சொற்றொடர், பொதுவாகத் தமிழ்மக்கள் எல்லோர்க்கும் கொடுத்துவந்த மகிழ்ச்சியைப்போல் அல்லாமல் இரட்டிப்புமடங்கு மிக்க மகிழ்ச்சியைச்சிறப்பாகத் திராவிட இயக்கத்தார்க்குமட்டுமே கொடுத்துவந்தது. 'பாண்டியன் ஆண்டான்' என்ற எண்ணம் ஏனையவர் எல்லோர்க்கும் மகிழ்ச்சியை அளித்தது. ஆனால் நமக்கோ அதோடுகூட, பட்டிவீரன்பட்டியிலே மாடிவீடு அமைத்துக் கொண்டு 'பாண்டியன் ஆளுகிறான்' என்ற மகிழ்ச்சியையும் சேர்த்தே அளித்தது அந்தச் சொற்றொடர். அப்படிப்பட்ட இரட்டிப்பு மகிழ்ச்சியைத் திராவிட இயக்கத்தவராகிய நாம்தான் பெறமுடிந்தது; பெற்றோம், பெருமகிழ்ச்சியுற்றிருந்தோம். ஆனால் அந்தோ! அந்த இரட்டிப்பு மகிழ்ச்சியை இனி நாம் பெறமுடியாது! தோழர்களே, பெறமுடியாது! திக்கற்றவர்களுக்குத் திசைகாட்டிக் கொண்டிருந்த கலங்கரை விளக்கம் அவிந்து விட்டது! ஊர்நடுவே வேண்டுவார்க்கு வேண்டிய அளவு பழம் ஈந்துவந்த பழமரம் வேரோடு பெயர்ந்து சாய்ந்து விட்டது! ஒளி மங்கி மறைந்து விட்டது! இருள் சூழ்ந்துவிட்டது! துயரமும், துக்கமும் நம் நெஞ்சைத் தாக்குகின்றன! மனம் நொறுங்கி விட்டது!

பட்டிவீரன்பட்டியிலே கால் ஊன்றித் தமிழகத் தரணியெங்கும் தம் புகழொளி பரப்பித் தன்னைநிகர்த்தார் இல்லை எனத் தம் புகழொளி பரப்பித் தன்னைநிகர்த்தார் இல்லாப் பெருமிதத்தோடு வாழ்ந்து வந்த மாவீரர்— அறிஞர்— தலைவர்—நண்பர்—தோழர் டபிள்யூ. பி. ஏ. சௌந்தரபாண்டியனார் அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்தார் என்ற செய்தியை இன்னமும் நம்மால் நம்பமுடியாத அளவுக்கு நாம் கலக்கத்திடையே தள்ளப்பட்டிருக்கிறோம்! அவரது பிரிவால் ஏற்படும் துயரமும், துக்கமும் இன்ன அளவினது என்று அளவிடுக் காட்ட இயலாவண்ணம், நாம் நொந்து கிடக்கிறோம்.

'பாண்டியன்' என்றால், நம்மனோர்க்கு, 'அஞ்சேல்' என்ற சொல்லோடு ஊக்கமும், ஆக்கமும் கொடுத்து, உணர்ச்சியும் உயர்வும் பயந்து, அருகேவந்து அன்போடு ஆரத்தழுவி, இன்சொல் பகர்ந்து, புன்முறுவல் வலித்து நிற்கும் அந்தப் பட்டிவீரன்பட்டி மாவீரனையே குறிக்கும்! பாண்டியன் மறைந்தார்! தமிழகம் ஒரு வீரரை இழந்தது!

கொள்கைக்காக எதையும் தாங்கும் இதயம் உடையவராகவே காட்சியளித்து, மனங்கலங்கா மாவீரராகவே வாழ்ந்துவந்தார். ஊக்கமுடைமை, உறுதியுடைமை, உழைத்தல், நீதிக்குப் போராடுதல், நேர்மைக்குப் பரிந்து பேசுதல், கொள்கையில் நிலையாக நிற்றல், நாணயமாக நடத்தல், ஒழுக்கம் பேணுதல், அன்போடு பழகுதல், ஏற்றத் தாழ்வு பாராமை, இன்சொல் கூறல், பரிவு காட்டுதல், செய்ந்நன்றியறிதல், அஞ்சாமை, ஆதரவற்றோர்க்கு ஆதரவளித்தல், எடுத்த செயலை நிறைவேற்றுதல், திறம்பட ஆணை செலுத்துதல் போன்ற அரும் பண்புகள்தாம் நண்பர் சௌந்தரபாண்டியன் அவர்களை யாவரும் மதிக்கத்தக்க உயர்ந்ததொரு இடத்திற்குக்கொண்டு போய்ச் சேர்த்தன.

"காட்சிக் கெளியன்; கடுஞ் சொல்லன்லன்" என்ற பொன்மொழிக்கு யாரையேனும் ஒருவரைச் சிறந்த எடுத்துக் காட்டாகச் சுட்டிக் காட்ட வேண்டுமாயின் அதற்குத் தோழர் பாண்டியன் அவர்களே முழுக்க முழுக்கப் பொருத்தமானவராவார்கள். தோழர் பாண்டியன்—பெரும் பணக்காரர்—காடு, கழனி, தோட்டம், துரவு ஏராளம் உடையவர்; ஆனால், ஆடம்பரம், ஆணவம், அகம்பாவம் ஆகியவற்றை எள்ளளவும் அவரிடம் காணமுடியாது. அரசியல் தலைவரோடு அரசியல் தலைவராய், சீர்திருத்தவாதியோடு சீர்திருத்தவாதியாய், பணியாட்களோடு பணியாளாய்; ஏழையோடு ஏழையாய்ப் பழகும் பண்பு அவரிடம் அமைந்ததைப்போல வேறு யாரிடமும் அவ்வளவு அருமையாக யாரும் காணமுடியாது.

நீதிக் கட்சியிலிருந்து அரசியல் ஏற்றத்துக்காகப் பாடுபட்டார். சுயமரியாதை இயக்கத்தில் பங்கு கொண்டு அயராது பணியாற்றி வந்தார். சுயமரியாதை இயக்கக் கொள்கைகளைத் தம் வீட்டு அடுக்களையிலிருந்து, அரசியல் வட்டாரம் வரை துணிந்து பரப்ப முன்வந்த முன்மாதிரியாக இருந்து வந்ததோடு— அந்தக் கருத்துக்களைக் காதால் கேட்பதும் தவறு, கருத்தால் எண்ணுவதும் தவறு என்று எண்ணிக்கொண்டு, எதிர்ப்பு வளர்ச்சி காட்டிவரும் பணக்காரர்களிடையே கேலி கிண்டலுடன், கருத்துக்களை வற்புறுத்திக் கூறுமளவுக்குத் துணிவு பூண்டும் விளங்கிவந்தார் என்றால், அத்தன்மையை வியந்து பாராட்டாமலிருக்கமுடியாது.

பணக்காரர்கள் கையிலே சிக்குண்டு சீரழிந்து கிடந்த நீதிக் கட்சியைப், பொதுமக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும் என்ற எண்ணம் அவருடைய உள்ளத்தில் பலகாலம் புகைந்து கொண்டிருந்த ஒன்றாகும். நீதிக் கட்சியைத் திராவிடர் கழகமாக மாற்றும் முயற்சி எடுத்த போதும், நண்பர் பாண்டியன் அவர்கள் தடையேதும், கூறாது அதனை வரவேற்றார். மற்ற நீதிக் கட்சியின் தலைவர்களின் போக்கிற்கு மாறுபட்டும் விளங்கினார். மாற்றியமைக்கப்படும் திராவிடர் கழகமே நல்ல அமைப்பு முறையோடு, தொண்டர்களைப் பேணி மதித்து இயங்க வேண்டும் என்று எண்ணினார். அப்படி எண்ணுவதே தவறு என்ற எண்ணம் நீடித்து வந்த காலம் வரை, நண்பர் பாண்டியன் அவர்கள் தாமும் அரசியல வாழ்விலிருந்து ஒதுங்கியிருந்து வாழ்வது நல்லது என்ற முடிவுக்கு வந்திருந்தார்.

அரசியல், பொருளாதார, சமுதாயக் கொள்கைகளை ஒருசேர இணைத்து, தூய்மையான உள்ளத்தோடு, உண்மை உழைப்பால், நல்ல நோக்கத்தோடு, அமைப்பு முறை பூண்டு திராவிட முன்னேற்றக் கழகம் பூத்துக் குலுங்கி, மணம் பரப்பத் தொடங்கியவுடன், நண்பர் பாண்டியன் அவர்கள் தம்மைத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஒருவன் என்று சொல்லிக் கொள்வதிலே பெருமிதமும், பூரிப்பும் அடைந்தார். சென்ற ஓராண்டு காலமாகத் திராவிட முன்னேற்றக் கழகச் சட்ட பூர்வமான உறுப்பினராக இருந்து வந்தார். மதுரை மண்டலத்தில சில இடங்களில் தி. மு. க. கொடியேற்றி வைத்தார்; பல தி. மு. க. பொதுக் கூட்டங்களில் கலந்து, தலைமை பூண்டு சிறப்புச் செய்தும் வந்தார். பட்டிவீரன்பட்டியைச் சுற்றியுள்ள சிற்றூர்-பேரூர்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தழைக்கச் செய்வதற்கு நல்ல ஆக்கம் அளித்து கழகத் தோழர்களுக்கு ஊக்கம் ஊட்டி வந்தார். தமது நெருங்கிய நண்பர் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்களைத் தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று, கழகத்திற்கான ஆக்கப் பணிகள் செய்து வரும்படி அடிக்கடி தூண்டி வந்தார்.

தேனியில் காங்கிரஸ்காரர்களால் கலகம் ஏற்பட்டு, நீதியற்ற செயல்கள் நடை பெற்ற போது, நண்ப

அவர் வழி நடப்போம்!

தோழர் சவுந்தரபாண்டியன் மறைவு காட்டுத்தீபோல் பரவியிருக்கிறது என்பது எல்லோரும் அறிந்ததே. பொதுவாக, எந்தத் தலைவர்களும் தாங்கள் செய்துவந்த பெருங் காரியங்களை மறைமுகமாக, அதாவது வெளிப் பிரசாரத்துக்கும் விடாமல் ஒவ்வொருவரும் செய்து வந்திருக்கிறார்கள். ஆனால், அக் காரியங்கள் ஏதாவதொரு காலத்தில் வெளியில் வந்துவிடுகின்றன. அவரவர் காலத்திலேயே வெளி வந்துவிடுமாயின் அதன்பின் அவர்களால் ஒன்றும் செய்ய இயலாது என்பது கண்கூடு. தோழர் சவுந்தரபாண்டியன் அந்தவிதமான இடைஞ்சல்கள் எதற்கும் இடம் கொடாது வெளியில் தோன்றாமலேயே தமிழ்நாட்டிற்குச் செய்த ஊழியம் எந்தத் தலைவர்கள் செய்ததையும்விட மிகச் சிறந்ததாகும். பிறந்தவர் மறைவது இயற்கையே யாயினும், தென்னிந்தியாவில், அதிலும் தமிழ் நாட்டில் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பில் அவருடைய மறைவு தமிழ்நாடு ஈடு செய்யமுடியாது என்பதை மறுக்க முடியாது. அவர் மறைந்தாலும் அவர், நாட்டின் நலனுக்காக ஆற்றிய பணியை எந்தக் காலத்திலும் யாராலும் மறுக்கவோ அல்லது மறக்கவோ முடியாது. அவர் செய்துள்ள பல உதவிகளையும் முன்னேற்றப் பணிகளையும் இப்போது இங்கு விவரிக்க இயலாது. இனி இருக்கும் இளைஞர்கள், அவர் கொள்கைகளைப் பின்பற்றி நடப்பதேதான், இவருக்குச் செய்ய வேண்டிய மரியாதையும், சடங்கும் நன்றியும் ஆகும்.

ஜி. டி. நாயுடு.

"அவருடன் எனக்கு ஏற்பட்ட சம்பந்தம் பல வருஷங்களாக இருந்திருப்பதுமல்லாமல் மிகவும் நெருங்கிய பழக்கமும் உண்டான காரணமாக எங்கள் இருவருக்குள் உள்ளன்பும் ஏற்பட்டிருந்தது. எனது உண்மையான நண்பர்களில் அவர்களும் ஒருவராக இருந்தார்கள். அவர்களின் மரணத்தால் எனக்கு ஒரு பெரும் நஷ்டம் சம்பவித்ததென்றே கருதுகிறேன்"

குமாரசாமி ராஜா
முன்னாள் முதலமைச்சர்.

"நண்பர் சௌந்தரபாண்டியன் அவர்கள் இணைபிரியாத எனது நண்பர். அரசியல் வித்தியாசங்களிருந்தபோதும் அவருடைய நட்பு என்றும் மங்காமலிருந்தது. முதல் மந்திரி பதவி வகித்த காலத்தில் அரண் போல்துணையாக நின்றவர், இவ்வளவு குறுகிய காலத்தில் நம்மை விட்டுப் பிரிவார்என்று நான் நினைக்கவில்லை. தேசத்தின் வளர்ச்சிக்காக தொழிலில் ஈடுபட்டு ஒருவாறு வெற்றியும் பெற்றவர். நான் அவரைப்பார்த்து சுமார் இரண்டு மாதங்கள் இருக்கலாம். உடல் நலம் குன்றியதாக எனக்கு தோன்றவில்லை"

டாக்டர். ப. சுப்பராயன்

பாண்டியன் உயிரை இழந்தார்
கண்கள் ஒளியை இழந்தன
ரெங்கசாமி தமயனை இழந்தார்
மக்கள் தந்தையை இழந்தனர்
பட்டிவீரன்பட்டி ஒருவீரனை இழந்தது
நாடார்சமூகம் தலைவனை இழந்தது
மதுரைநகர் கடைசிப்பாண்டியனை இழந்தது
தமிழ்நாடு தன்செல்வனை இழந்தது
இந்தியா ஒருஅறிஞனை இழந்தது
அரசியல்வாதிகள் ஒருயோக்கியனை இழந்தனர்
அறிவுஇயக்கம் தன்வழிகாட்டியை இழந்தது
தோழர்கள் துணைவரை இழந்தனர்
பகைவர்களும் நண்பரை இழந்தனர்
ஏழைகள் ஆதரவை இழந்தனர்
மனைவியார் வாழ்வையே இழந்தார்கள்
யானோ அனைத்தையும் இழந்தேன்

—கி. ஆ. பெ. விசுவநாதம்

பாண்டியன் அவர்கள், தேனி சென்று, கலவரம் நடந்த இடத்தைப் பார்வையிட்டு, நீதி மன்றத்தின் மூலம் நாட்டிலே நீதியை நிலைநாட்டி, உண்மைக் குற்றவாளிகளை உலகுக்குக் காட்டவேண்டும் என்ற உறுதி பூண்டார். தேனிக் கலவரம் பற்றிய வழக்குத் தொடுக்க வேண்டும் என்று என்போன்றார் விரும்பியபோது, அதற்குப் பேருதவியாக இருந்து ஒத்துழைப்புத் தந்தார். தேனிக்கலவர வழக்கு நிதிக் குழுவுக்குத் தான் தலைமைப் பொறுப்பு வகிக்க இசைந்ததோடு. நிதிக்குத் தன்னுடைய பங்காக ரூ. 1000-0-0 தருவதாக அன்புடன் இசைந்து வழக்கு செலவிற்காக ரூ. 500-0-0 கொடுத்து உதவினார்கள். கம்பம், மதுரையில் நடை பெற்ற நிதி நாடகம் செழிப்போடும், சிறப்போடும் ஈடேற, எல்லா உதவிகளையும் உடனிருந்து புரிந்து, நாடகத்திற்குத் தலைமை தாங்கவும் செய்தார்.

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகப் பற்றுக் கொண்ட மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் பிரச்சாரப் பயிற்சிப் பள்ளி ஒன்றைத் தம்முடைய தோட்டத்தில் நான்கு நாட்கள் நடத்துவதற்குப் பேருதவியாக இருந்தார். சுமார் நாற்பது மாணவர்களும் பிறரும் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டனர். ஏறத்தாழ நூறு பேருக்கு நான்கு நாட்கள் உண்டி, உறையுள் வசதிகளைச் செம்மையாக அளித்து வந்ததோடு, நான்கு நாட்களும் உடனிருந்து, சேய்களைப் பாதுகாக்கும் தாய்போல், கண்காணிப்புச் செய்து வந்தார். ஓய்வு நேரங்களில் மாணவர்களின் கேளிக்கைக் கூத்துகளில் தானும் ஒருமாணவராகவே இருந்து களிப்பூட்டி வந்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியிலே நீங்கா அக்கரையும், ஆதரவும் காட்டி வந்த அருமைத் தலைவர் பாண்டியன் அவர்கள் நம்மை விட்டு பிரிந்தது, தாங்கொணாத் துயரை அளிக்கிறது! தோழர் பாண்டியன் அவர்களின் இழப்பு, ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

இன்னும் சிறிது காலத்தில், தனக்குள்ள சொந்தப் பொறுப்புகளிலிருந்து சிறிது, சிறிதாக தம்மை விடுவித்துக்கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தில் பணி புரிய எண்ணியிருப்பதாக அவர் பலமுறை என்னிடத்திலும், அண்ணா அவர்களிடத்திலும், மற்ற நண்பர்களிடத்திலும் கூறி வந்திருக்கிறார். தம்முடைய மகனாரைக் கழகப் பணிபுரிவதிலே ஈடுபடுத்தித், தமக்குப்பின்னும் பொதுப்பணியினைத் தம் குடும்பம் தொடர்ந்து செய்ய வேண்டும் என்று விரும்பி, அதற்கான ஊக்கமும் அவ்வப்போது, காட்டிவந்தார்.

'செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்' என்பதற் கேற்ப, கழகத் தோழர்களை உறுதியுடன் தாங்கி வந்த மறக்குடி மகனார் பாண்டியனார் மறைந்தார் எனினும், அவருடைய எண்ணமும், கொள்கைகளும் நம்மைவிட்டு மறைய வில்லை. அவர் இருந்தால் நிலைமை எப்படி இருக்குமோ, அந்த நிலைமையை உண்டாக்க நம்மை நாமே ஆளாக்கிக் கொள்வோமாக! அதுதான் நாம் பெறக் கூடிய ஆறுதல்!

புன்சிரிப்போடுபெருநடைபோட்டுக் கொண்டு, 'வாங்கய்யா......கழகத்தை எப்படியய்யா வைச்சிருக்கிங்க...... எங்கய்யாகூட்டம்......'' என்று கேட்டுக் கொண்டே, அருகே வந்து, தோளில் கை போட்டு, அணைத்துக் கொண்டு, இனிக்கப் பேசிச் செல்லும், அந்தப் பெருந்தன்மையாளரை இனிக் காண முடியாது! என் செய்வது!......

இரா. நெடுஞ்செழியன்.

''வேலைக்காரி'' நாடக வைரவிழாவில்...
27—4—47.



கவர்னர் தம்பதிகளுடன் பாண்டியனார் (1944.)

சௌந்தரபாண்டியன்மறைவைப்பற்றியசெய்தியைக் கேட்டதும என் மனதில் ஒரு கலக்கம் ஏற்பட்டது. அவருக்கும் எனக்கும் 32 வருடத்திய நட்பு. அவருடைய மறைவினால் நான் ஒரு அருமையானநண்பனை இழந்துவிட்டேன். சென்ற சிறிது காலமாக அவர் பொதுவாழ்க்கையில் அதிகம்கலந்துகொள்ளாமல் இருந்தபோதிலும், நாட்டின்நலத்திலும், சமூகத்தின்முன்னேற்றத்திலும் அவருக்கு எப்பொழுதும் கருத்து உண்டு.

நண்பர்கள் ஒரு சிறந்த நண்பனை இழந்து விட்டார்கள். தமிழ்நாடு ஒருநல்லதமிழனை இழந்துவிட்டது. என்னைப்போலவே துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் எல்லாநண்பர்களுக்கும்என் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை-ஆர். கே. சண்முகம்.
(முன்னாள் இந்திய நிதி அமைச்சர்)

நாவலர் எஸ். எஸ். பாரதியார்

பாண்டியனார் எதிர்பாராமல் மறைந்தது பெரிதும் வருந்துதற்குரியது. மக்கள் உரிமை—பொதுநலத்தொண்டுமுதலியபணிகளில் ஆர்வத்தோடும் ஊக்கத்தோடும் முன்னணியில் நின்றுதளராது உழைத்துப்பெருமைக்குஉரிமைகொண்டவர்.சில துறைகளில் கருத்து வேறுபாடுடையோரும்அப்பெரியார் தூயஉளப்பண்பைப் பாராட்டுவர். அறிஞரும் இளைஞரும் ஆக்கவேலையில் முயலுவோர் அனைவரும் அவரை எடுத்துக்காட்டாக என்றும் சுட்டும் சீலமும் சிறப்பும்உடைய அப்பெரியாரை தமிழர்வாழ்த்துவர்.

பேரரண்—சாய்ந்தது!

“நாடு ஒப்பற்ற தலைவரை இழந்து விட்டது. ஈடு செய்ய முடியாத குறைபாட்டையடைந்தது நாடார் மகாசன சங்கம். ஏழை எளியவர்கள் நல்ல ஆதரவாளனை நீங்கப் பெற்றார்கள். சீர்திருத்த உலகிலே தூணாகி நின்ற ஒரு பெருமலை சாய்ந்து விட்டது. நாட்டின் முன்னேற்றத்திற்கு அரணாக விளங்கிய செம்மல் மறைந்தார். அவதிபட்டோரும் தாழ்த்தப்பட்டோரும் சிறந்த நண்பரை இழந்தனர். தங்களுடைய உயர்வுக்கும், உரிமைகளுக்கும் உறுதுணையாக நின்ற கோமகனைப் பெண்ணினம் பார்க்கமுடியாமற் போய்விட்டது. விளையாட்டுத்தோழன்,—பொதுநலத்தொண்டன்— நிர்வாகவிவேகி—ஏழை பங்காளன் —செருக்கற்ற செம்மல்—சான்றோர் பெருந்தகை—கொடைக்கானல் ஏரியில் தவறி விழுந்து மாய்ந்த இளம் மைந்தனைக் கண்டும் கலங்காத மனத்தினன்—கொள்கையிலும் முயற்சியிலும் பெரியன்— இத்தகைய பெருந்தகைக்கு அண்ணாவாக அமைந்த அண்ணல்—நாற்பது ஆண்டு நண்பனாகவும், வழிகாட்டியாகவும், தலைவனாகவும், இலங்கிய பேரரண் யாண்டுச்சென்று மறைந்ததோ?” என்று விருதுநகர் வி. வி. ராமசாமி M.L.A. அவர்கள், தாங்கொணாத் துயரத்தோடு எழுதுகிறார்—

“நாற்பது ஆண்டுகள், நானும் மாவீரர் பாண்டியனும், பழகினோம். பாண்டியன் நீதிக் கட்சியுடன் இணைந்தவுடனே யானும் அந்த இயக்கத்தில் என்னையறியாமலே கலந்துகொண்டேன். அவர் பங்கெடுத்துக்கொள்ளும் எல்லாக்கூட்டங்களுக்கும் உடன் செல்வது உண்டு. அதன் மூலமாக நாடார் மகாசன சங்க நடவடிக்கைகளிலும் பெரிதும் பங்கெடுத்துக்கொள்ள முற்பட்டோம். பன்னிரண்டாண்டுகள் தொடர்ந்து சட்டசபையில் அங்கம் வகித்த காலையில் அவர் நாட்டுக்கும் பிற்பட்ட சமூகங்களுக்கும் ஆற்றிய பணி சொல்லுந்தரமன்று. சொந்த நலத்தைச் சிறிதும் பாராமல் முழுநேரத்தையும் கவனத்தையும் பொதுத்தொண்டிற்குச் செலுத்தி வந்தார். எந்தச் சங்கட நிலைமைக்கும் அஞ்சாமல் எப்பேற்பட்ட அரசியற்சிக்கலையும் எளிதில் நீக்கிவிடுவார். கட்சித் தலைவரானாலும், அரசாங்க அமைச்சரானாலும் இவருடைய உள்ளத்தூய்மையைக் கண்டும், கட்சிக்கொள்கைகளிற் கொண்ட உறுதிப்பாட்டை உணர்ந்தும், இவரிடத்தில் தனி மரியாதையும் சிறிது அச்சமும் கொண்டே நடந்துவந்தார்களென்பதில் ஐயமில்லை. எதையும் ஆய்ந்து அறிந்து சுருக்கமாகத்தான் சொல்லுவார். வாய்மையின் காரணமாக அது வலிமையோடும் இருக்கும். சொல்லிவிட்டாற் சொல்லின்படி நிற்பார். தனி மனிதனோ, சங்கமோ, படிப்பகமோ, பள்ளியோ, நிதிக்காகத் தயங்கினால் ஏற்ற அளவில் தான் கொடுத்து உதவுவதுடன், மற்றவர்களையும் கொடுக்கும்வண்ணம் முகமன் உரைத்து ஆதரிப்பார்.

சென்னையில் டாக்டர் சுப்பராயன் தலைமையில் மந்திரி சபை அமைத்தகாலத்தில் இவர் குறடாவாக இருந்துசெய்த தொண்டினால் தான் அச்சபை வலுத்து நிற்க முடிந்தது. அந்தக்காலத்திலே தான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உத்தரவும் போடப்பட்டது. நகர சபை, ஜில்லாபோர்டு முதலிய ஸ்தாபனங்களிலே பெண்களுக்குப் பிரதிநிதித்துவமளிக்கப்பட்டதுமல்லாமல் இந்த ஸ்தாபனங்களுக்குப் பாத்தியப்பட்ட கிணறு முதலிய பொது இடங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு அமுலிலிருந்த தடைகளெல்லாம் நீக்கப்பட்டன. இம்மாதிரியான சீர்திருத்த ஆக்க வேலைகளில் பாண்டியன் உறுதியாகமுன்னின்று வேலைசெய்தார். 22—10—1928-ம் தேதி ஜில்லா போர்டு தலைவராக நியமிக்கப் பட்டார். அந்தப் பதவிக் காலத்தில் தான் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குப் பள்ளி, படிப்பகம், சாலைவசதி, குடிதண்ணீர் வசதி முதலிய உதவிகளை உறுதியாக நிரந்தரமாகச் செய்து தந்தார். மேலும் போக்குவரத்து மோட்டார் வண்டிகளில் ஆதித்திராவிடர்களுக்கு இடமில்லை என்று சொன்ன நிர்வாகிகளின் லைசென்ஸ் ரத்துச் செய்யப்படுமென்று தலைவர் பாண்டியனால் உறுதியாகத் தெரிவிக்கப் பட்டவுடன் அந்தஇழிவும்உடனே நீக்கப் பட்டது. இச்செய்கையால் தாழ்த்தப்பட்ட சமூகம் பாண்டியனை இன்றும் நன்றியுடன் பாராட்டுவதில் வியப்பில்லை,

ஒரு முதலாளியின் ஆதிக்கத்திலிருந்த ஒரு சிறு பஞ்சாயத்துப் போர்டின் நிர்வாக ஊழலை வெளிப்படையாக உறுதியாகக் கண்டித்தார். இதைக்கேட்டுக் கலக்கமடைந்த முதலாளிவர்க்கம் சூது செய்து மாவட்டக் கழகத்தில், (இவரால் ஆமோதிக்கப் பட்ட, ஆனால நன்றி மறந்த) ஒரு உறுப்

(9-ம் பக்கம் பார்க்க)

பாண்டியரே! பகுத்தறிவுச் சோதியே! என்று கேட்கப்போகிறேம், இனி?

இயக்க வளர்ச்சிக்காக, எழுப்பினீரே, முழக்கங்கள்!

வீரக் கர்ஜனை வீழ்ந்ததய்யோ!!

தவிக்கிறேம், தலைவா!

[தலைவர் பாண்டியனார் அவர்கள், சுயமரியாதை மேடைகளில் நின்றெழுப்பிய சங்கநாதங்களை நினைத்துப் பார்த்தால், இதயம் விம்மும். கொள்கைகள் பரவவேண்டுமென்பதில் அவர் கொண்டிருந்த ஆர்வம் ஒவ்வொரு வார்த்தையிலும் தொனிக்கும்! சரிதப்புகழ்பெற்ற முதலாவது சுயமரியாதை மாநாடு, செங்கற்பட்டில் 1929 மார்ச்சில் நடைபெற்றபோது அவர்தான் தலைமை தாங்கினர். அன்று, அவர், வாலிப உலகுக்கும், பெண்களுக்கும் விடுத்த அன்பழைப்பு, இது. அவர், இல்லை! ஆனல், அந்த அன்பழைப்பு நம் இதயத்தில் இன்றும் ஒலிக்கிறது.]

"உலகத்திலுள்ள ஒவ்வொரு ஜன சமூகமும், நாடும் திட்டமான முன்னேற்றமடைந்தது, அத்தேச வாலிபர்களின் முயற்சியாலேயே. முதிர்ந்த அனுபோகசாலிகளின் தலைமையின்கீழ் வாலிபர் தொண்டு செய்ய ஆரம்பித்தால் அவர் எடுத்த கருமம் கைகூடாமற் போகாது. இதை எண்ணியே கிரேக்க தேசத்து தத்துவ ஞானியான சாக்கிரடீஸ் என்பவரும் உலகமெங்கும் புகழ்படைத்த சுவாமி விவேகாநந்தரும் 'என் மனம் வாலிபர்களையே நாடுகிறது' என்று கூறியுள்ளார்கள். 'வாட்டர் லூ யுத்தம் ஈட்டோனியர்களால் ஜெயிக்கப்பட்டது' எனும் பழமொழி எதைக்குறிக்கின்றது? இங்கிலாந்தின் தலைவிதியை மாற்றக் கூடியவண்ணம் வாட்டர் லூ என்னுமிடத்தில் ஈட்டன் கலாசாலையில் கல்வி கற்றுவந்த வாலிபர்களின் உதவியால் ஆங்கிலேயர்களுக்குண்டான வெற்றியைக் குறிக்கின்றதல்லவா? உலகத்தோர் பிரமிக்கும்படி தங்கள் நாடுகளைச் சீர்திருத்தம் செய்த கமால்பாஷா போன்றவர்களும், அவர்கள்தம் சிஷ்யர்களும் வாலிபர்களன்றே? பழைய உலக முழுதும், ஜெயித்துவெற்றிக்கொடி நாட்டிய அலெக்சாண்டரும், அவருடைய சேனைகளும் வாலிபர்களன்றே? சுமார் அறுபது ஆண்டுகளுக்குமுன் இருந்த இடம் தெரியாமலிருந்த ஜப்பான், இன்று கிழக்குப் பிரிட்டன் என்று அழைக்கப்படுவதற்குக் காரணம், அதன வாலிபர்களின் முயற்சியன்றே? இத்துணைப் பெருமையை அடக்கிக் கொண்டிருக்கும் வாலிப உலகமே! நான் உங்களை வேண்டிக்கொள்வது ஒன்று உண்டு — கெமால் வீரனைப் போன்றும், ஆப்கன் அமீரைப் போன்றும், பெரியதோர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நீங்கள் கஷ்டப்பட, நான் விரும்பவில்லை. ஈட்டன் மாணவர்களைப் போன்று ஆயுதம் புரிய வேண்டவில்லை. ஒத்துழையாமை இயக்கத்தார்களைப் போன்று படிப்பையும், தொழிலையும் விட்டு விட்டு ஜெயிலுக்குப் போகுமாறு உங்களை நான் அழைக்கவில்லை. ஆனல், நம்சமூகத்தில், மதத்தின்பேரால், சாஸ்திரத்தின்பேரால், வேதத்தின் பேரால் நடந்துவரும் கொடிய பழக்கவழக்கங்களை, களைந்தெறிய கிராமப்பிரச்சாரம்செய்ய முன்வாருங்களென்றே வேண்டுகிறேன். அறுபது வயதுக்கு மேற்பட்ட சுப்பையாபிள்ளை என்ற உங்கள் தாத்தாவைப் பத்து வயது பார்ப்பனப் பாலகன், அடே சுப்பா! என்று அழைக்க இன்னும் நீங்கள் சார்த்துக்கொண்டிருக்கப் போகிறீர்களா? பார்ப்பான் காலில் சாஷ்டாங்கமாய் விழுந்து, அவன் காலைக்கழுவிய தண்ணீரை அருந்த இன்னும் சம்மதிக்கிறீர்களா? வழக்கமென்னும் கொடு நோயால் பீடிக்கப்பட்டிருக்கும் உங்கள் மாதா, பிதாக்களுக்கும் சகோதரிகளுக்கும் எடுத்துக் காட்டி உண்மையை விளக்குவது உங்கள் கடனாகும். ஆகையால் நீங்கள் எல்லோரும் கொடுநோய்களை நாட்டை விட்டு ஓட்டுவதற்கான பிரச்சாரம் செய்ய வேண்டும். வாலிபர்கள் முனைந்து முன்வரின் கைகூடாக் கர்மம் இல்லவே, இல்லை. உலகம் உங்கள் உதவியையே நாடி நிற்கிறது!"

*

"மற்ற இயக்கங்களைவிடப் பெண்கள் இயக்கத்தையே அதிக முக்கியமாகக் கருதுகிறேன். ஒரு தேசத்தின் முன்னேற்றம், அத்தேசப் பெண்மக்களின்முன்னேற்றத்தைப் பொறுத்திருக்கிறது. "தாயைப் போல் பிள்ளை" யென்பதற்கு ஒப்ப, தாய்மார்கள் எத்துணை குணம் பொருந்தியவர்களாயிருக்கின்றார்களோ, அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளும் அத்துணை குணம் பொருந்தியவர்களாயிருப்பார்களென்பது உலக அனுபவ முடிவு. மக்களைப் பக்கத்தில் வைத்து செப்பனிடும் பொறுப்பு தாய்மார்களைப் பொருத்திருக்கிறது. அவர்களுக்கு நல்லுபதேசம் போதித்துப் பள்ளி செல்லும் வரை பாடம் கற்பிக்கும் முறை அவர்களுடையதே. நம் சமூகத்தின் முன்னேற்றம் வருங்கால நிலைமையைப் பொறுத்திருக்கிறது. குழந்தைகளின் நிலைமை தற்காலத் தாய்மார்களின் கல்வியையும், ஒழுக்கத்தையும் சார்ந்தது. ஆகவே, நமது முன்னேற்றம் வருங்கால நிலைமையைச் சார்ந்திருக்கிறதென்பது வெளிப்படை. இவ்வாறு ஒரு சமூகத்தை நேரடியாகக் கட்டுப்படுத்தும் பெண் மக்களை நாம் என்ன செய்தல் வேண்டும். ஆண் மக்களின் அடிமைகள்போல் நாம் அவர்களை நம் அடுப்பங்கரையிலும், வீடுகளிலும் அடைத்து வைத்திருக்க நான் இஷ்டப்படவில்லை. அடுப்பூதும் பெண்களுக்கு கல்வியெதற்கென்னும் பிறபோக்கான முதுமொழியில் எனக்கு நம்பிக்கையில்லை. ஆண்களைப்போன்று பெண்களுக்கும் கல்வி போதித்தல் வேண்டும். சமுதாயத்திலும், அரசியலிலும்; சம அந்தஸ்துக் கொடுக்க வேண்டும். குடும்பச் சொத்துக்களிலும் சம்பாகம் கொடுக்க வேண்டும். இவைகளையெல்லாம் கொடுக்க ஆண்கள் மறுப்பினும் பெண்கள் வலிந்து பெறுவதற்கான கிளர்ச்சிகள் செய்தல் வேண்டும். ஆகவே, உங்கள் கடனில் முதலாவதாக நீங்கள் இதை எண்ணி அவர்களுக்கு உடனே சுதந்திரம் அளித்தல் வேண்டும். குடும்ப அடிமை என்னும் பட்டத்தை நீக்க வேண்டும். அப்பொழுது தான் நம் சமூகம் சீர்படும்.

*

இன்பம்பொங்க வாழ்த்தினர் துன்பம் பொங்க போய்விட்டார்!

[1941 ஜனவரி 13ல், பாண்டியனார் அவர்கள், நமது இயக்கத்தவர்களுக்கு அனுப்பிய, பொங்கல் வாழ்த்தின், ஒரு பகுதி, இது]

"முன்னாளில், ஒரே சமூகத்தினராகப் பாவிக்கப்பட்ட நாம் ஆரிய சகவாச தோஷத்தினால், பல சமூகங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒருவருக்கொருவர் சண்டை பிடித்துக் கொண்டு, கிடக்கிறோம்.

நமக்குள் ஒருவருக்கொருவர் பரஸ்பர அன்பும் நம்பிக்கையும் இல்லை. ஒவ்வொரு வகுப்பினருள்ளும், பல்வேறு உட்பிரிவுகளை நுழைத்து பகைமை கொண்டு கொல்லும் சத்துருக்கள் போன்று வாழ்கிறோம்—நமக்கு மேலான வகுப்பு ஒன்றும் தாழ்ந்த வகுப்பு ஒன்றும் உண்டு என்கிற கருத்துடையவர்களாக வசிக்கிறோம். இதன் காரணமாக நமது சமூகத்துக்கு ஈடு செய்ய முடியாத இழிவைத் தேடிக் கொள்கிறோம்—என்பதை மதக் காப்பாளர்களும், மதத்தின பெயரால் நம்மைக் குறை கூறும் கூட்டத்தினரும், உணருவதில்லை. தம்மை க்ஷத்திரியர் என்று தற்பெருமை கொள்வோர், கொள்க. விசுவப்பிராமணர் என்று விளம்புவோர், விளம்புக. வைசியரென்று அழைப்போர், அழைத்துக் கொள்க. இன்னும் எவ்வெவ்வாறு கூறிக்கொள்ள இஷ்டப்படினும் அவ்வவ்வாறெல்லாம் கூறிக் கொள்க. ஆனல, இவர்களெல்லாம் பார்ப்பனர்களால் ஒரே தன்மையாய்த்தான் பாவிக்கப்படுகிறார்கள். பார்ப்பனர் கண்ணுக்கு நாமெல்லோரும் சூத்திரர்கள் தான். இதற்கு பார்ப்பனர் மாநாடுகளின் தீர்மானங்களே போதிய சான்றாகும்."

*

[1938 மார்ச் 19, 20 தேதிகளில் நடைபெற்ற தஞ்சை சுயமரியாதை மாநாட்டில் தலைமை தாங்கி, பாண்டியனார் பேசுகிறார்...]

"தோழர்களே! நான் இயக்கத்திலிருந்து விலகிவிட்டதாகப் பலர் கூறி வருவதாகக் கேள்விப்படுகிறேன்.

அவ்விதம் யாராவது கருதுவார்களானல் அதை நம்பாதீர்கள். நான் இயக்க வேலைகளில் கலந்து கொள்ளாதிருந்தாலும் இயக்கத்தானே யென்பதை நீங்கள் மறந்துவிட வேண்டாம்.

என்னைப் பலர் காங்கிரசில் சேர்ந்துவிடுமாறு வற்புறுத்தினர்கள். அவர்களுக்குத் தக்க புத்திமதி கூறி, நான் அனுப்பிவிட்டேன். அவ்வாறு என்னைக் காங்கிரசில் சேருமாறு கூறிய நண்பர்களும் அங்குபோய்ச் சேர்ந்து தோல்வியடைந்தார்கள்.

நமது இயக்கம்

மக்களுடைய மூடநம்பிக்கையை ஒழிக்க, ஓய்வு ஒழிவின்றி நமதியக்கம் வேலைசெய்து வருகிறது. நமது இயக்கக் கொள்கைகளினல், நமது நாட்டில் ஒரு பரபரப்பு ஏற்பட்டு வந்திருக்கிறது. நமது மக்கள் இன்று பகுத்தறிவுடன் விளங்குவதற்கும் மூடப் பழக்கவழக்கங்களை ஒழித்து அறிவுடையோராக விளங்குவதற்கும் நமது இயக்கமே காரணமென்பதை நமது எதிரிகளே ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

பாமர மக்களிடத்திலே ஏமாற்றுப் பிரசாரம் செய்து தங்கள் வாழ்க்கையை நடத்திவந்த ஒரு கூட்டத்தாரை ஒடுக்கி மூலையில் அமர்



புகழ் மாலை அணிந்து, போய்க்கொண்

★ கழகத் தோழர்களே! மாணவமணிகளே! மார்ச் 8-நடபெ

கள். அவை மீண்டும், தலை யெடுத்தால் நம்மை என்றென்றும் அடிமைகளாக்கி மீளாமல் செய்துவிடும்.''

✲

ஊழியர்களே! புறப்படுங்கள்!

"மக்களை ஏய்க்க காங்கிரஸ் காரர்கள் செய்கின்றவிஷமத்தனமான பிரசாரத்திற்கு ஆங்காங்கு தக்க பதில் கூறி, உண்மை நிலைமையை எடுத்துக் கூற மும்முரமாக பிரச்சாரம் செய்வதில் ஒவ்வொரு ஊழியரும் முன்வரவேண்டும். பிரசங்கம் செய்ய தலைவர்கள்தான் வரவேண்டுமென்று எண்ணிக் காலம் தள்ள, இது சமயமல்ல. ஒவ்வொருவரும், இதில் தனக்குள்ள கடமையை உணர்ந்து தொண்டாற்ற முன்வர வேண்டும். விஷயம், வெட்ட வெளிச்சமாகி விட்டது. இதை மக்களிடம் கூறினால் என்ன? ஆகையால் தொண்டர்கள் நகரங்களில் வீதி வீதியாகவும், கிராமங்கள் எதுவும் தவருமலும் சென்று விஷயத்தை எடுத்துக்கூறவேண்டும்.''

விருதுநகரில் 1939 ஆக. 14ல்

✲

[கட்சி வளர்ச்சியில், ஆர்வத்தோடு மறைந்த பெருந்தகை காட்டிய ஆர்வத்தை, வடசேரி சுயமரியாதை மாநாட்டுத் தலைமை உரை விளக்கும். வடஆற்காடு மாவட்டச் சார்பில், மேற்படியூரில் இம்மாநாடு 1939 ஆகஸ்டு 31ல் நிகழ்ந்தது. 14 ஆண்டுகளுக்கு முன் பாண்டியனர் பேசுகிருர்...]

"நமது கட்சியிலே பணக்கார ஆதிக்க மனப்பான்மையும் சோர்வும் சோம்பலும் அடியோடு ஒழிக்கப்படவேண்டும். பழைய போக்குள்ளவர்களின் நோக்கம் மாற்றப்பட வேண்டும்......

*

பாட்டாளி மக்களின் பண உதவியைக் கொண்டே நமது இயக்கம் நடத்தப்பட வேண்டும். மேலும் பணக்காரரின் பணத்தைக் கொண்டு நடத்துவதென்றல், பலன் தராது. பணக்காரர், பணம் கொடுத்தால் தங்களின் சொந்த இலாபத்தின் கணக்கைக் குறியாக வைத்துக் கொண்டு தானே தருவார்கள்.

மாவீரரின் கடைசி நாட்கள்

[அ. பொன்னம்பலனர்]

நம் அருமைத் தோழர் டபுள்யூ. பி. எ. சௌந்தரபாண்டியன் அவர்கள், தென்னிந்திய ஏலவிவசாயிகள் சங்கத் தலைவர் எ. சுப்பராஜ் எம். எல். எ., முதலியோருடன் 16-1-53-ல் சென்னையில் ஏல விவசாயிகள் சங்கச் சார்பில் அரசியலாரிடம் பேசி, விட்டுத் திரும்பிய பிறகு, அடிக்கடி வியர்வை எற்பட்டு நெஞ்சில் வலி ஏற்பட்டது—உடனே ஒரு டாக்டரிடம் காட்டிப் பரிசோதித்தார்கள். அவரும் ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்த்துவிடும்படி யோசனை கூறினர். அதுபோல் மாலை 3-30-மணிக்குள் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

நம் அருமைத் தோழர் பாண்டியன் அவர்கள் 16—1—53-மாலை 4-மணிக்குள் சென்னை ராயபுரம் அறிவகம் தி.மு.கழக தலைமை நிலையத்தில், நம் அருமை அண்ணர் சி. என். எ. அவர்களையும், அருமைத் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களையும் சந்தித்துப் பேசலாம்; தேனிக் கலவர வழக்கைப் பற்றியும், நிதி சேர்க்கும் முயற்சிகள் பற்றியும் கலந்து பேசலாம் என்று கூறி இருந்தபடி ஏற்பாடுகள் செய்து எதிர்பார்த்திருந்தார்கள். 16—1—53-ல் வர முடியாத நிலைமை. சந்திக்க முடியாத நிலைமை ஏற்பட்டது. பிறகு இது விவரம் எல்லோருக்கும், டெலிபோன் மூலமும் தபால மூலமும் அறிவித்தேன்.

16—1—53 மாலையேபட்டிவீரன் பட்டிக்கு எக்ஸ்பிரஸ் தந்தி கொடுக்கப்பட்டது 17—1—53 அதிகாலை

> பாண்டியனர் மறைந்தார்—அரியதோர் ஒளிவிளக்கு அணைந்துவிட்டது. திராவிட மாணவ உலகம், மாவீரரின் மறைவால், தேம்புகின்றது. அவர் பாதையில் செல்வோம்! வெல்வோம்!! வாழ்க பாண்டியனர், தொண்டு.
>
> K. A மதியழகன்
> திராவிட முன்னேற்ற
> மாணவக்கழக
> பொதுச்செயலாளர்.

புதல்வர் டபிள்யு. பி. எ. எஸ். தீனதயாளன் அவர்கள் மட்டும் வந்து சேர்ந்தார்கள். ஜெனரல் ஆஸ்பத்திரி டாக்டர் பி. ரெத்தினசாமி அவர்களும். அவருடைய உதவி டாக்டர்களும் தினசரிபரிசோதித்து சிகிச்சையளித்தார்கள். உடம்பில் ரத்த ஓட்டம் வேகத்தையும் பரிசோதித்தார்கள். எலெக்ட்ரிக்—ரேடியோ கிரேப் என்ற கருவி மூலம் இருமுறை பரிசோதனை செய்தார்கள் ஆரம்பத்தில் 5. 6 நாட்களே நலிவுடனிருந்தார், பிற்கு உற்சாகமாகவே நலிவின்றி இருந்தார். டாக்டர்கள் கூறியபடி ஓய்வு முக்கியம், படுக்கையிலிருக்க வேண்டும், நடமாடக்கூடாது; அதிகம் பேசக்கூடாது. பால், முட்டை, காபி போன்ற உணவுகளை எல்லாம் நீக்கி விடும்படி கூறிய ஆலோசனைகளையும்; டீ, பழச்சாறு, கஞ்சி, தயிர், மோர் போன்ற ஆகாரங்களையும் ஏற்றுக் கொண்டு, இறுதிவரை டாக்டர்கள் ஆலோசனைப்படியே நடந்து கொண்டு வந்தார்.

22—1—53ல் புதல்வர்கள் டபிள்யு. பி. எ. எள். பாஸ்கரன், டபிள்யு. பி. எ. ஆர். நாகராஜன், ஆகியவர்கள் பட்டிவீரன்பட்டியிலிருந்து வந்து கண்டார்கள். தம்பியின் புதல்வர் டபிள்யு. பி. எ. ஆர். ராஜாராம்—ஜோதி, மணி திருமணம் 29—1—53-ல் ரிஜிஸ்டிரார் ஆபீசில் நடைபெறச்செய்திருக்கும் ஏற்பாட்டை மாற்றிவிடலாம் என்று கேட்டுப் போகவும், உடல் நலம் அறிந்து போகவும் வந்திருந்தார்கள். "எனது உடல் நலம் திருப்திகரமாய் இருக்கிறது. ஓய்வுக்காகவே இங்கு இருக்கிறேன், திருமணத் தேதியை மாற்றவேண்டாம்; குறிப்பிட்டபடி திருமணம் 29—1—53ல் இனிது நடைபெறட்டும். நானும் வாழ்த்துச் செய்தி அனுப்பிவிடுகின்றேன். ஊருக்கு வந்த பிறகு தம்பதிகளைப் பார்த்து மகிழ்கிறேன்'' என்று கூறி இரவே அனுப்பிவிட்டார். திருமணம் குறிப்பிட்டபடி ஆடம்பரமின்றி சடங்குகள் விருந்துகள் எதுவுமின்றி 29—1—53-ல் மதுரை திருமணப் பதிவு ரிஜிஸ்ட்ரார் ஆபீசிலேயே திருமணப் பதிவு நடைபெற்றது.

தம்பதிகட்கு 29—1—53-காலை 9-மணிக்கு எக்ஸ்பிரஸ் தந்தி மூலம் அவருடைய வாழ்த்துச் செய்தியை அவர் கைப்படவே எழுதி அனுப்புவித்தார்கள். 2—2—53 இரவு திருமதி W. P. A. S. பாலம்மாள (வாழ்க்கைத் துணைவியார்) அவர்களும், புதல்வர் திரு. W. P. A. S. கிருஷ்ணமூர்த்தி தம்பதிகளும் சென்னை வந்து சேர்ந்தார்கள். தினசரிவந்து பாண்டியனரைக் கண்டு பேசி அவர்கள் தங்கியுள்ள வீட்டிற்குச் செல்வார்கள்.

அவர் மூத்த புதல்வர் திரு. W. P. A. S. தீனதயாளன் தம்பதிகளுடன், குழந்தைகளுடனும் மாப்பிள்ளை திரு. எஸ். கணேசன்—விஜயாம்பிகை, செல்வி பூங்கோதை ஆகிய எல்லோரும் காரில சென்னைக்கு வந்து 20—2—53 மாலையே ஆஸ்பத்திரியில் வந்து பேசி மகிழ்ந்து, எப்போழுது நாம் ஊருக்குப் போகலாம்? என்று கேட்டார்கள். ஒருவாரம் 10-நாட்களில் போகும்படி டாக்டர் கூறலாம் என்று நினைக்கிறேன் என்று கூறி அனுப்பிவைத்தார்.

ஆரம்பமுதல் 16—1—53 மாலை ஆஸபத்திரியில் சேர்க்கப்பட்டது முதல் நானும் தோழர் சிங்போஸ் (பட்டிவீரன்பட்டி) அவர்களும் பக்கத்திலிருந்து உதவிகள் செய்து கொண்டிருந்தோம். உடுமலைப் பேட்டை பொதுக் கூட்டத்துக்கு 20—2—53 சென்று விட்டு22—2—53ல்காலைதிரும்பவும் சென்னைவந்து—அவரைக் கண்டேன். "நல்ல கூட்டமா? நன்ருகப் பேசினீர்களா? ராஜேந்திரபிரசாத்துக்குக் கருப்புக்கொடி காட்டுதல் நடைபெற்றதா? அண்ணவின் ஆதரிப்பு அறிக்கையைப் பார்த்தேன்! என்றெல்லாம் பேசினர்.

22-2-53 மாலை 2—45க்கு மேல் வியர்வை அதிகம் ஏற்பட ஆரம்பித்தது. "நான் சாகப் போகிறேன்; ஆஸ்பத்திரியில் சாகப் போகிறேன்; வீட்டுக்கு குழந்தைகட்குச் சொல்லவும்'' என்றவார்த்தைகளே அவர் இறுதியாகக் கூறியவை. எல்லோரும் வந்தனர்; துடித்தனர். பேச முயன்றர்; முடியவில்லை. 15 நிமிடங்களில்வேதனைப்பட்டு, இவ்வுலக வாழ்வையே விட்டு நீங்கினர்.

பி. டி. ராஜன் அவர்களுக்கு டெலிபோனில் கூறினேம். என். எஸ். கே. தம்பதிகள் முடிவு தெரிந்து வந்தார்கள். கலங்கினர்கள். ஒப்பற்ற வீரன்; உண்மை, நேர்மை, ஆண்மை, அன்பு, அறிவு, உறுதி எல்லாம் ஒருங்கே நிறைந்த உத்தமனைப் பறிகொடுத்த வேதனையை என்னல் அடக்கவே முடியவில்லை. இனி என்று காண்போம். பாண்டியனர்போன்ற ஒரு அஞ்சா நெஞ்சம் படைத்த செல்வத்தை ஏழைகள்மீதும் ஒடுக்கப்பட்ட, மக்கள்மீதும் அன்புகொண்டு அரும் பணிபுரிந்த அருமை நாயகத்தை தீண்டாமையும் பெண் அடிமையும் வேண்டாமையாகும் என்று விளக்கி செயலாற்றிய வீரனை இழந்தோம்.

கலைவாணர் என். எஸ். கே. அவர்கள் காரில் நம் அருமைப்பாண்டியனர் உடலை மாலை 6 மணிக்கு எடுத்துக்கொண்டு 23—2—53ல் விடியற் காலை 3-30 மணிக்கு வந்து சேர்ந்தோம். எல்லோரும் கலங்கினர்; கதறினர், பல்லாயிரக் கணக்கான மக்கள் வந்து கண்டு தங்கள் இறுதி மரியாதையைத் தெரிவித்துக் கொண்டனர்.

பிற்பகல் 2-30 மணிக்கு பூக்களால் அலங்கரிக்கட்ட ஜீபகாரில் நம்பாண்டியன் உடலை பட்டிவீரன் பட்டி முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று இறுதியாக அவர் பங்களாவில் அடக்கம் செய்தார்கள். அவரது பிரிவு குறித்து, தோழர்கள் எஸ். ஜி. ஜெயராஜ், கி. ஆ. பெ. விசுவநாதன். நடிகர் டி. வி. நாராயணசாமி, சங்கரய்யர், கு. அ. முத்து, க.அ.புன்னைமுத்து, ப. ரா. முத்துச்சாமி, சொக்கலிங்கபாண்டியன், அய்யாவு எம். எல். எ. ஆகியோர் பேசினர்.

அவரது பிரிவு ஈடுசெய்ய முடியாதது என்று எண்ணி கலக்கமடைகின்றேன். ஆயினும், அவர்கள் விட்டுச்சென்ற பணியை ஆர்வத்துடன், மன உறுதியுடன், தொடர்ந்து செய்வதே நம் கடமை என்பதையும் நான் உணர்கின்றேன். அவர் வாழ்க்கையில் நான் கண்ட பல உண்மைகளையும், அவருடைய சிறந்த நற்குணங்களையும், அவரது பிரிவால் கலங்கி நிற்கும் என்னல் இப்பொழுது எடுத்துக்கூற இயலவில்லை என்ற போதிலும், ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடின்றி, எல்லோரையும் அன்புடன் வரவேற்று உபசரித்து வேண்டுவார்க்கு, வேண்டுவதை, வேண்டும் பொழுதெல்லாம் உள்ளன்புடன் உணர்ந்து செய்த பெருங் கருணையை என்னல் என்றும் மறக்கவே முடியாது. நம் அருமைப் பாண்டியனருக்கு இன்று ஈடுஇணை வேறு யார் உளர்?

✲

டிவீரன் பட்டி கதறுகிறது! அழுகிறது!!

டியனர் நினைவு நாள் கொண்டாடுங்கள் —அண்ணாதுரை. ★

ரசித்தார், அன்று! கதறவிட்டார், இன்று!!

[கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்]

தலைவர்பாண்டியன் மறைவு தமிழ்நாட்டுக்கும் சிறப்பாக முற்போக்கு இயக்கங்களுக்கும் பெரும் நஷ்டமாகும். எனக்கு அவருடன் பொது வாழ்விலும், எனக்கும் மதுரத்துக்கும் அவர் குடும்பத்தின் ஒவ்வொருவருடனும் நெருங்கிய உறவினர்கள்போன்று ஒன்றிப் பழகச் சந்தர்ப்பமிருந்தது. அவரது உறுதிப்பாடு, திறமை, நேர்மை, விருந்தோபும் பண்பும், முதலியனபற்றி எவ்வளவு புகழ்ந்தாலும் அதிகமாகாது.

அவர் எல்லாவகையாலும் பெரிய மனிதராக இருந்தார். பகுத்தறிவு இயக்கத்தின் முன்னணியாளர் சிலரைக் குறிப்பிட்டால் அதிலும் முதலிடம் பாண்டியனதுதான். சொல்லும் செயலும் ஒருங்கே பொருந்திய தலைவர். வீட்டுக்கொரு கொள்கை, நாட்டுக்கொருகொள்கையென அவர் வாழவில்லை. சுயமரியாதைக் கொள்கைகளை, தான் மட்டுமல்ல, தன்குடும்பமும், சார்ந்தவர்களும் கொண்டு ஒழுகுமாறுசெய்துகொண்டிருந்தார். சுயநலத்தை சிறிது பாதித்தாலும்கூட அதைத் தாங்காது பெரிதென மதித்து கட்சிவிட்டு கட்சிகள் மாறி; ஏறிய ஏணியையே உதைத்துத் தள்ளுபவர்களை இன்றைய பொதுவாழ்வில் பரக்கக் காண்கிறோம். பாண்டியனைக் காலமும் செல்வாக்கும் அதிகாரமும் பிரச்சாரங்களும்கூட கொள்கைகளிலிருந்தும் நேர்மையிலிருந்தும் மாற்றமுடியவில்லை. அவர் பொதுவாழ்வில் தோன்றியதுமுதல் அண்மையில் அகன்றதுவரை சுயமரியாதைக்காரராக, பகுத்தறிவுவாதியாக, விளங்கிவந்ததைபோற்றுமலிருக்கவேமுடியாது.

உணவுப் பெருக்கத்துக்காக, ஆட்சியாளர்கள் அறிக்கையும், பேச்சும் செய்துகொண்டிருந்த காலத்தில் செயலில் உணவுப் பெருக்கத்துக்கு வழிகாட்டியவர் பாண்டியன்தான். அந்தப் பிரதேசங்களுக்கெல்லாம் ஓர் மாதிரிப் பண்ணை இலாகா வைத்து விவசாய வளர்ப்புக்கு உதவியவராக இருந்தார். சர்க்கரை, சர்க்கரை என்று நாட்டில் மக்கள் தவித்துக்கொண்டிருந்த பஞ்சநாளில், துணிவுடன் முன்வந்து சர்க்கரை ஆலையைத் தொடங்கினர். கருவிகளும் தக்க தொழில் நிபுணர்களும் கிடைத்தற்கரிதான அந்நாளில ஈடுபட்டு வெற்றியும் கண்டார். அவரது தொழில் இயல்நுட்ப ஆற்றலுக்கு ஒரு எடுத்துக்காட்டாக மதுரை செல்லும் ரயில் பாதை பக்கம், பாண்டிய ராஜபுரம் எனும் புதிய ஊருடன் வானுற ஓங்கி நிற்கிறது பாண்டியர் சர்க்கரை ஆலை. இந்திய துணைக்கண்டத்தில் இருக்கும் மிகப் பெரிய ஆலைகளில் இது ஒன்றாகும்.

ஏழை மாணவர்களுக்கும் கல்வி நிலையங்களுக்கும் அவர் தம் கைப்பொருளை வாரி வழங்கி வந்தார். என்னைக் கல்வி உதவிநிதிகளுக்காக இயன்றவரை பல ஊர்களுக்கும் பயன்படுத்திக் கொண்டார். நானும் அவர் நன்நோக்கங் கண்டு அவர் அழைப்பைத் தட்டாது என்றும் மகிழ்வுடன் ஏற்று வந்தேன். சுருங்கக் கூறினல் அவர் ஒரு நல்ல பணக்காரராக பணக்காரர்களுக்கு சான்ருக இருந்தார். அவருடைய புதல்வர்களையும் நன்மக்களாக பேணி வளர்த்திருப்பது வியப்பிற்குரியது. அன்புடன் பழகுவது விருப்புடன் உபசரிப்பது இவைகளிலெல்லாம் தந்தைக்கு சற்றும் பின் வாங்கியவர்களல்ல. தம்மக்களைப்பட்டம் பதவிகளுடன் வெறும் ஆடம்பரப் பதவிகளில் ஈடுபடுத்தாமல் தம் தொழில் துறைகளிலேயே அமைத்துக் கொண்டது அவரது வாழ்வில் பெற்ற பண்பாட்டின் வெற்றியல்லவா? அவர்-சிறியவன், பெரியவன், என்ற தராதரம்பாராமல் குறைகளைஏற்று உதாசீனம் செய்யாது உதவி வந்தார்.

எங்களுக்கு அவரது பிரிவு சொந்த முறையில் ஒரு நெருங்கிய உறவினரை ஆதரவாளரைப் பிரிந்த துயரத்தைத் தருகிறது. கொள்கை, நேர்மை ஆற்றல் உடையவர்களை செல்வர்கள் ஏற்றுத் தம்முடன் நடத்துவது நடைமுறை வாழ்க்கையில் காண்பதரிதாகும். நண்பர் பண்பாளர் அ. பொன்னம்பலனரின் உறவும் உழைப்பும் சௌந்தரபாண்டியனுக்கு இறுதிவரை இருந்தது அவர் உயர் பண்புக்கு சான்ருகும். தமிழகம் மறைந்த தலைவருக்கு எல்லாவழிகளாலும் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது.

நல்ல தலைவரை இழந்தோம்

1920-ம் ஆண்டிலிருந்தே திரு. சௌந்தரபாண்டியன் அவர்களை எனக்கு நன்கு தெரியும். 1920-லிருந்து 1937-வரை. சென்னை மேல் சபையில் நாங்கள் இருவரும் அங்கத்தினர்களாகப் பணியாற்றினேம்; இடையில் மூன்று ஆண்டுகள் மட்டும் அவர் நியமனம் பெற்று அங்கு பதவி வகித்தார். 1926-ல் டாக்டர் சுப்பராயன் மந்திரிசபை அமைத்த பொழுது, அவரது வேண்டுகோளின் பேரில் கட்சியின் பிரதமகொரடாவாக இருந்தார். மதுரை, ராமநாதபுரம் ஜில்லா போர்டுகளின் தலைவராகச் சில காலம் பணியாற்றினர். பொதுவாழ்வில் அவர் ஈடுபட்டிருந்த பொழுதெல்லாம், பொதுமக்களின் நலத்திற்காகப் பாடுபட்டாரேயன்றி தன் சுயநலத்தில் சிறிதேனும் அவர் நாட்டம் செலுத்தவில்லை. இந்த உண்மையை விளக்கும் சம்பவமொன்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ராமநாதபுரம் ஜில்லாபோர்டு தலைவராக அவர் இருந்த பொழுது, சில மெம்பர்கள் தங்கள் சுயநலத்திற்காகத் திரு. பாண்டியன் பெயரை உபயோகிக்க முயன்றார்கள்; இது தெரிந்ததும், திரு. பாண்டியன் எவ்விதத் தயக்கமுமின்றி தம் தலைவர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்.

திரு. சௌந்தரபாண்டியன் விவசாயத் துறையில் பெரிதும் ஆர்வங் காட்டிவந்தார்; அவருடைய கிராமத்திற்கருகில் அவர் நடத்திய பண்ணை மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்கியது. அவருடையதோட்டங்களில் ஏலக்காய், காப்பி, மற்றும் உயர்தர கனிவர்க்கங்கள், எவரும் கண்டு பாராட்டுமளவுக்கு, விளைகின்றன.

திரு. பாண்டியன் நேர்மையாகவும், வெளிப்படையாகவும் பேசும் சுபாவமுடையவர்; இது சிலருக்குப் பிடிக்காமலிருந்திருக்கலாம். தொழில் அபிவிருத்திகளிலும் அவர் ஆர்வங்காட்டினர். அவருடைய முயற்சியால் மதுரை ஜில்லாவில் ஒரு சர்க்கரைத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. வாழ்நாள் முழுவதும் தமிழகத்தின் உரிமைக்கும் உயர்வுக்கும் அவர் பாடுபட்டார். அவருடைய மறைவினல் தமிழ்நாடும் குறிப்பாக மதுரை ஜில்லாவும் ஒரு நல்ல தலைவரை இழந்துவிட்டது. 33-ஆண்டுகள் நீடித்துப் பழகியபின், நான் ஒரு நல்ல நண்பரை, இழந்துவிட்டேன்.

P. T. இராசன், எம். எல். ஏ.

பாண்டியன் வழி நடப்போம்!

[எஸ். ராமநாதன், முன்னாள் அமைச்சர்]

சௌந்தரபாண்டியன் மறைவு அறிவியக்கத்திற்கு ஒரு அதிர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சி தன்மான வெற்றி இவற்றின் அடிப்படையில் புதிய உலகம் சிருஷ்டிக்கவேண்டுமென்று கனவு காணும் முன்னேற்றவாதிகளுக்கு ஈடுசெய்ய முடியாத ஒரு நஷ்டம்.

இன்றைய தினம் தமிழ் நாட்டில் மாத்திரமல்லாமல் வெளிதேசங்களிலும் வியாபாரத் துறையில் மாத்திரமல்லாமல் அரசியலிலும் நாடார் சமூகத்தினர் தலைசிறந்து விளங்குகிருர்கள் என்ருல் அது சௌந்தரபாண்டியன் சேவையின் பலனுகும். ஆனல் நாடார்கள் மாத்திரம் மேன்மையடையவேண்டும், மற்றவர்களைக் காட்டிலும் நாடார்கள் உயரவேண்டும் என்ற வகுப்புவாதத்தை பாண்டியன் எதிர்த்து வந்தார் மக்களிடையே சமத்துவம் நிலவ வேண்டும், மனித சமூகம் ஒன்றுபட வேண்டுமென்பதே அவரது குறிக்கோள்.

பழைய ஜஸ்டிஸ்கட்சிக்குப் பாண்டியன் சேவை செய்தது உண்மை. அந்தக் கட்சியில் இரண்டு மாறுபட்ட கருத்துக்கள் போராடின. ஒன்று பிராமண ஆதிக்கத்துக்கு எதிர்ப்பு அன்றைக்கும் இன்றைக்கும் தென்னாட்டில் தீராத ஒரு பிரச்னை இது. பொதுமக்கள் வாழ்க்கையில் கொந்தளிப்பை உண்டாக்கி அமைதிக்கு பங்கம் விளைப்பது. வரப்போகும் புரட்சிக்கு அஸ்திவாரம். இந்த கருத்துக்கே பாண்டியனது மனம் ஒப்பியது. இந்த நோக்கத்தோடு இயங்கிய அளவில் ஜஸ்டிஸ் கட்சியை வேறொருநோக்கமும் ஆட்டிவந்தது. அது சமயோசிதம். அக்காலத்தில் நாட்டில் ஆதிக்கம் செலுத்திய அந்நிய நாட்டாரின் உறவு, மக்களின் மனதில் ஆதிக்கம் செலுத்தியசாதி, சமயங்களுக்குப் பணிவு. இந்த துரோக எண்ணத்திற்கு மக்கள் உடன்படவில்லை, ஆகவே ஜஸ்டிஸ் கட்சி முறியடிக்கப்பட்டது. இந்த சமயோசிதத்திற்கு பாண்டியன் உடன்படவில்லை. உடன்பட்டிருந்தால் அவருக்கு "சர்" பட்டம் கிடைத்திருக்கும். சமயோசிதத்திற்கு விரோதமான புரட்சி எண்ணம் அவருடைய உயிரை ஊடுருவியது. அதன் காரணமாகவே அவருக்குப் பல தொல்லைகளும் நஷ்டங்களும் ஏற்பட்டன. எனினும் நெஞ்சழுத்தத்தோடு கடைசிவரையில் புரட்சி எண்ணத்தையே சாதித்து வந்தார்.

புரட்சிக்கும் சமயோசிதத்திற்கும் உள்ள போராட்டத்தை செங்கற்பட்டில் நடந்த முதலாவது சுயமரியாதை மாநாட்டில் கண்டேன். பாண்டியன் தலைமை வகித்தார். யானைகள் கட்டிய ஊர்வலம், ஜனத்திரள், காங்கிரசை எதிர்த்து உயிர் வாழ்வதற்கு இதைத் தவிர வேறு வழியில்லை யென்று ஜஸ்டிஸ்கட்சிப் பிரமுகர்கள் அனைவரும், ஆர்வத்தோடு கலந்துகொண்டார்கள். டாக்டர் சுப்பராயன் மகாநாட்டை திறந்துவைத்து "1 நெம்பர்" சுயமரியாதைக்காரன்மாதிரி பேசினர். பாண்டியன் தலைமை உரையைக் கேட்கும்போது ஜஸ்டிஸ் கட்சியிலுள்ள வைதீகர்கள் நெஞ்சு "திக் திக்" என்று அடித்துக்கொள்ள—தலையைமாத்திரம் ஆட்டிக்கொண்டிருந்தார்கள். விஷய ஆலோசனைக் கமிட்டியில் ஜாதிகளையும் சமயங்களையும் அறவே ஒழிக்கவேண்டும் என்ற புரட்சித் தீர்மானங்கள் உருவகமாகும்போது இந்தச் சமய சஞ்சீவிகள் ஒருவர் ஒருவராக மெள்ள நழுவிவிட்டார்கள்.

பாண்டியன் எண்ணப்படி காரியங்கள் நடைபெற்றிருக்குமானல் இன்றைய தினம் இந்த நாட்டை காங்கிரஸ் சமய சஞ்சீவிகள் ஆள முடியாது. புரட்சி வேகம் பொருந்திய சுயமரியாதைக் கொள்கை ஆண்டிருக்கும். இனியும் இந்நாட்டில் புத்துயிர் முளைத்துப் புரட்சி வேகத்தில் முன்னேற்றம் ஓங்க வேண்டுமானல் பாண்டியன் எண்ணத்தை மக்கள் நிறைவேற்றி வைக்கவேண்டும். சுயமரியாதை இயக்கத்திலும் அதை ஒட்டி வளரும் திராவிட இயக்கத்திலும் ஆர்வங் கொண்ட அன்பர், பாண்டியன் பிரிவால் மனமுடைந்து கண்ணீர் வடிக்கும் தோழர்கள், பாண்டியன் வழிநடக்க வேண்டும். ஒவ்வொருவரும தங்களையே சோதிக்க வேண்டும். நமக்கு ஏற்பட்டிருக்கும்தடை எதிரிகளாலல்ல. நம்முடைய சகோதரர்—நம்முடைய தலைவர்களால்தான். இன்னும் சோதித்துப்பார்த்தால் ஒவ்வொருவரும் தம்மால்தான் என்று உணர வேண்டும். புரட்சியும் சமயோசிதமும் ஒவ்வொருவர் உள்ளத்திலும் போராடுகின்றன. பாண்டியன் நினைவால், அவரது பெயரால் புரட்சிக்கு வேகங்கொடுத்து சமயோசிதம் என்னும்சுயநலத்துக்குத்தடையுண்டாக்கினல் வெற்றி நம்மை நாடி வரும், பாண்டியன் எண்ணம் நிறைவேறும். அவரது உடல் இயற்கை எய்தியது. அவரது எண்ணம் நம் மனதில் வேரூன்ற வேண்டும். பாண்டியன் மறைந்தார்! பாண்டியன் வாழ்க!

பாண்டியனோடு, உடனிருந்து பணியாற்றிய என் மனம் தவிக்காதா?

தன் செல்வனைப் பரிதாபகரமான நிலையில் பறிகொடுத்த அந்த துயரமிக்க நேரத்திலும், மறுநாள் பொதுக் கூட்டத்தில் பேசிய, அவரது பொதுநலப்பற்றையும், கலங்கா மனதையும், தன் குடும்பத்தைவிட, மக்கள் நலத்தையே பெரிதாகக் கருதினர் என்பதை நினைத்தால் யார் மனம்தான் பதறாது?

பாண்டியன் அவர்களைப் போல் அநேக பாண்டியன்கள் உண்டாகட்டும் என்ற மனச்சாந்தியுடன், என் மனம் நொந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆ. இராமாமிர்தம்மாள்



மாவீரர் பாண்டியனார், திராவிட முன்னேற்றக் கழகக் காளைகளைக்கண்டால், மகிழ்ந்துஉபசரித்த நாட்களை எண்ணினால் ... கண்கள் அருவியாகின்றன! புன்சிரிப்பும் பெருமிதமும் தவழ்ந்த அந்த முகம் போய்விட்டது!

கடந்த ஆண்டு மாவட்டந்தோறும் மாணவப் பிரச்சாரப் பயிற்சிகள் ஏற்பாடு செய்தபோது, மதுரை மாவட்ட மாணவச் செயல் வீரர்களைத் தமது இல்லத்தில் வைத்து, நான்கு நாட்கள் மகிழ்வித்தார்! 'நமது கொள்கை வளர்கிறது ஐயா!' என்று ஒவ்வொருவரிடமும் கூறிக் கூறிப் பூரித்தார்—அந்தப் பாண்டியரை, அந்தோ! பறி கொடுத்துவிட்டோம்!! மதுரை மாவட்டச் செயலாளர் S. V. தொந்தி, ஆவடையப்பன், இரா. நெடுஞ்செழியன், அய்யாச்சாமி, தேனி கழகத் தோழர் ஆகியவர்களோடு 'அவர்' அமர்ந்திருக்கும், காட்சி இது.

வாழ்க்கை வரலாறு

மாவீரர் பாண்டியன் அவர்கள் 1894 செப்டம்பர் 17-ல் (விஜய ஆண்டு புரட்டாசி முதல் தேதி) வெள்ளியன்று பட்டி வீரன் பட்டியில் பிறந்தார். தகப்பனார் பெயர், அய்ய நாடார். தாயார் பெயர், சின்னம்மாள். உடன்பிறந்தோர்—ஒரு தம்பி, ஒரு அக்கா, இரண்டு தங்கைகள். மூன்று புதல்வரும் ஒரு புதல்வியும், மனைவியாரும், இருக்கிறார்கள்.

படிப்பு

5-வது வயதில் சின்னச்சாமி நாயுடு என்ற ஆசிரியரிடம் கல்வி பயிலத்தொடங்கி, 18-வது வயதுக்குள் மதுரை, யு. ஸி. உயர் நிலைப் பள்ளியிலும், விருதுநகர் க்ஷத்திரிய வித்தியாசாலையிலும், சென்னை கிருஸ்துவ கல்லூரியிலும் கல்வி கற்றார். படிப்பைப்போலவே, விளையாட்டுகளிலும் சிறந்தவராக விளங்கினார். கால்பந்தாட்டம், டென்னிஸ், கிரிக்கெட், வேட்டை ஆடுதல்—இவரது, பொழுது போக்குகள்.

இல்லறம்

20-வது வயதில் பாலம்மாள் அவர்களை துணைவியாக ஏற்றார். பாண்டியனாரும் துணைவியாரும் நடாத்திய இல்லற வாழ்க்கையின் சிறப்பை, எழுத இயலாது! மணவினை முடிந்தநாள் முதல் கடைசி வரை அவர்களிருவரும் இணைபிரியாமல் வாழ்ந்தனர். பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலைக்காக, நான்கு ஆண்டுகள், இருவரும் குடிசையிலிருந்து உழைத்துப் பாடுபட்டதை மறக்க முடியாது.

பொதுவாழ்வு

26-வது வயதில சென்னை மேல் சபையின் உறுப்பினராக, ஆனார். அது முதல் மூன்று முறைகள், மேற்படி சபையின் உறுப்பினராகயிருந்து பணிபுரிந்திருக்கிறார். 1928 முதல் 1930 வரை இராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவராகயிருந்து பணியாற்றியதை, அந்த ஜில்லா வாசிகள், இன்னும் மறக்கவில்லை! ஜாதிமத பேதங்களை இவர், வாழ்க்கையில் வெறுத்த போதிலும் பிற்படுத்தப்பட்டோரான நாடார் குல மக்களின் முன்னேற்றத்துக்காகவும் வளர்ச்சிக்காகவும் அவர்களது தலைவராகயிருந்து, கடைசி வரை தொண்டு புரிந்தார். கிராமப் பகுதிகளில் வசித்தோருக்கு, பாண்டியனார் மூலம் கிடைத்த நன்மைகள், ஏராளம். 1929-ல் செங்கற்பட்டில் நடைபெற்ற முதல் சுயமரியாதை மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். பட்டி வீரன் பட்டியில் இன்று உயர்தரக் கல்விச் சாலையிருப்பதற்கு, அஸ்திவாரம் இட்டவர், அவரே. அநேக நகரங்களுக்கு மின்சாரவசதி வருமுன்பே இக்கிராமத்துக்கு 1939-லேயே கொண்டுவரச்செய்தார்.

அவரது 40-வது வயதில் தந்தையார் காலமாகவே, குடும்பத்தலைவரானார். பாண்டியனாரும் அவரது தம்பி ரங்கசாமியும், இளங்கோ அடிகள் சேரன் செங்குட்டுவனைப் போல சகோதர பாசத்தோடு வாழ்ந்தார்கள்.

பயிர்த் தொழில்

'கொடிமுந்திரி பயிராகாது' என்று விவசாய இலாகாவினர் கைவிட்ட இடத்தில், தானே பயிரிட்டு, கே. கே. நாயர் என்ற விவசாய நிபுணர் முன்னிலையில் மெய்ப்பித்துக் காட்டினார். கரும்பு உற்பத்தியில் எவ்வளவு அதிகம் உண்டாக்க முடியும் என்பதையும் செய்து காட்டினார். கறம்பு நிலத்தில் கரும்பு பயிரிட்டு, அதிக உற்பத்தி செய்த இவரது திறமையைக் கண்டு சர்க்கார் வியந்தனர்—பாராட்டுப் பதக்கமளித்தனர். தனது பங்களாவின் பின் புறத்தில் உண்டாக்கிய சாத்துக்குடி ஆரஞ்சுப்பழத் தோட்டம், இந்திய துணைக் கண்டத்திலேயே, முதன்மையானதாக விளங்கி வருகிறது. தனது நேர்பார்வையிலேயே தினந்தோறும் 500 ஏக்கர் நஞ்சை கரும்பு, பழத்தோட்டம் ஆகியவைகளைச் சுற்றிப் பார்ப்பதும், பயிரிடுவதுமாக இருந்தார்.

தாரதரம், அந்தஸ்து பார்க்காமல் யாருடனும் தோள்மேல் கைபோட்டுக் கொண்டு பழகுவதை எவராலும் மறக்க முடியாது!

மதுரை மாவட்டத் தலைவர்

1943—1947-வரை மதுரை ஜில்லாபோர்டு தலைவராகயிருந்து இவர் ஆற்றிய சேவைகளைப் பற்றி, ஒவ்வொருகிராமமும்பேசும்! 1947ல் மதுரை சர்க்கரை ஆலையை சர் பி. டி. இராசன், மதுரை மில்லார் ஆகியோரின் கூட்டுறவுடன் ஆரம்பித்தார். ஐந்து ஆண்டுகளில் ஆற்றிய சலியாதஉழைப்பே, இவரை நம்மை விட்டுப் பிரித்தது!

விவசாயத் தொண்டு

1944-ல் ஏல விவசாயிகள் சங்கத்தை உண்டாக்கி, விவசாயிகளுக்கிருந்த அநேகக் கஷ்டங்களை நிவர்த்தி செய்தார். ஏலக்காய்க்கு, நல்ல விலை, கிடைக்கச் செய்தார்.

1941 முதல் இந்தியன் காப்பி போர்டு மெம்பராக இருந்து காப்பி விவசாயிகளுக்கு சேவை செய்தார். அவர்களின் சவுகரியத்துக்காக, காப்பி பதனிடும் தொழிற்சாலையை கூட்டுறவு முறையில் நிறுவினார். விவசாயிகளின் நலனுக்காக கிரடிட் சொசைடி, கோவாப்பரேடிவ் ஆகியவைகளை அமைத்தார்.

மாணவர்களுக்கு

இளம் மாணவர்கள் ஆயிரக்கணக்கானவர்களுக்குப் படிப்பதற்கு வசதி செய்து கொடுத்தார். மாணவர்கள் என்றால் மிகவும் பிரியம் காட்டுவார். மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்களில் அநேக சிறிய கிராமங்களில் பள்ளிக்கூடங்களை ஆரம்பித்து வைத்திருக்கிறார்.

விதவா விவாகத்திலும், கலப்பு மணத்திலும் மிகவும் அக்கரை காட்டி நூற்றுக்கணக்கான திருமணங்களைத் தன் சொந்தச் செலவில் நடத்திவைத்திருக்கிறார்.

1952 ஜனவரியில் திராவிட முன்

(அடுத்த பக்கம் பார்க்க)

பாண்டியனாரும் அவரது வாழ்க்கைத் துணைவியார் பாலம்மாள் அவர்களும்.

வருத்தமும் அனுதாபமும்

[ஏராளமான தந்தி—கடிதங்கள், பாண்டியனார் மறைவு கேட்டு, குடும்பத்தாருக்கு வந்து குவிந்துகொண்டுள்ளன.]

சென்னை கவர்னர் பிரகாசா
கோவை பழனிச்சாமிநாயுடு
டாக்டர் ஆர். நாகன்னகௌடா
(விவசாய அமைச்சர்)
எ. பி. ஷெட்டி
(சுகாதார அமைச்சர்)
வி. ஐ. சாக்கோ
கே. காமராஜ் (காங்கிரஸ் தலைவர்)
இராமனாதபுரம் ராஜா
கே. கே. நீலமேகம்
புதுக்கோட்டை ராஜா
கோவை—ஸ்டேன்ஸ்
பொறையார் கனகசபைநாடார்
பெங்களூர் குற்றாலிங்கம்பிள்ளை
தஞ்சை எ. ஓய். அருளானந்த சாமிநாடார்
டாக்டர் எ. அருணாசலம், மதுரை
ஏ. வேணுகோபால், மதுரை
ஈழத்தடிகள்
சென்னை-ராயன்
மதுரையில் மார்சல்
,, சேமரான்
த. பி. சொக்கலால் சேட்
திருவாங்கூர் ரெவின்யு அமைச்சர்-சிதம்பர நாடார்.
டி. கே. எஸ். சகோதரர்கள்
சொ. முருகப்பா. மரகதவல்லி
டி. எஸ். ராஜம்
டி. எஸ். சிமா
என். எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி
பி. எஸ். குமாரசாமிராஜா
டாக்டர் ப. சுப்பராயன்
ராம. சின்னையா, புதுக்கோட்டை
அண்ணாதுரை
டாக்டர் மதுரம்
பெரியார்—மணியம்மை
ஆர். கே. சண்முகம்
இரா. நெடுஞ்செழியன்
டி. கே. பகவதி
கே. சி. நாயக்
ஆர். வி. சாமிநாதன் எம்.எல்.எ.
பழைய கோட்டை பட்டக்காரர்
டாக்டர் எஸ். தர்மாம்பாள்
M. D. ராமசாமி B. A., M. P.
கே. பி. சுந்தராம்பாள்
வாலாஜாபாத் பாடசாலை
ப. கண்ணன்
என். வி. நடராசன்
கே. எம். தாமஸ் (பாலனூர்)
எம். சிகாமணி அனந்தர் (பூவாளூர்)
சி. ஆர். ஸ்ரீபதி (சென்னை)
கே. எம். எஸ். லக்ஷ்மணய்யா
எஸ். எம். கே. சுந்தரம்
மீனாம்பாள் சிவராஜ்
சாமிசிதம்பரனார்: சிவகாமி
கே. டி. கே. தங்கமணி
டி. கே. ராமா எம். எல். எ.
பாரதாமுத்துத் தேவர் எம்.எல்.எ.
அய்யாச்சாமி செட்டியார்
குஞ்சிதம் குருசாமி
எஸ். குருசாமி
எ. லகாஷ் தம்பதிகள்—புதுவை
டி. டி. வீரப்பா விசாலாட்சி
எஸ். ஆரோக்கியசாமி, நகர்
எஸ்.லாஸர், அட்வகேட்-திருச்சி
ராம. சுப்பையா விசாலாட்சி—காரைக்குடி
என். கண்ணபிரான் தம்பதிகள் ,,
அ. இளங்கோவன் (பூவாளூர்)
கே. சுப்பையா (காரைக்குடி)
ப. மா. அப்பன்னசாமி காரைக்குடி

மதுரை அழுதது

செய்தி அறிந்ததும் மதுரை கழகத் தோழர்கள் கொடிகளை, பாதிக் கம்பத்தில் பறக்கவிட்டனர்—கருப்புக் கொடிகள் உயர்த்தப்பட்டன. பல இடங்களில் வியாபாரிகள் கடைகளை அடைத்து அனுதாபம் தெரிவித்தனர். மாலையில் ஒரு மாபெரும் மௌன ஊர்வலம் கிளம்பி, கீழ் மார்க்கெட் திடல்வந்தது. ஊர்வலத்தில் பதினாயிரம்பேர் கலந்துகொண்டனர். எஸ். முத்து தலைமையில் ராசமான், சித்தையன்கோட்டை காசிம், அய்யாச்சாமி, மதுரை, வசனப்பித்தன், எம். ஆர். கணேசன், எஸ். வி. தொந்தி, இளமுருகு, நடிகமணி டி. வி. நாராயணசாமி, பேசினர்.

காரைக்குடியில்

வர்த்தக நாடார் சங்கத்தார் கடையடைப்பு செய்தனர். கே. அமிர்தபாண்டியன் தலைமையில் மௌன ஊர்வலம் சென்று மரியாதை காட்டினர்.

தஞ்சை

நாடார்கள் உறவின் முறை சார்பில் நாட்டாண்மை மா. ம. மாய நாடார் தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. எல்லோரும் எழுந்துநின்று மரியாதை செய்தனர்.

✲

மாறு திருமதி பாண்டியனாருக்கும் திரு. பாண்டியனார் தம்பியாருக்கும் பிள்ளைகட்கும் நினைவூட்டுகிறோம்.

வைசு. ஷண்முகம்,
மஞ்சுளாபாய் வைசு,
கானாடுகாத்தான்,

மலை சாய்ந்தது

பாண்டியனாருக்கு கடைசி மரியாதை செலுத்த திரளான நண்பர்களும் உறவினர்களும் பட்டிவீரன்பட்டியில் கூடியிருந்தார்கள் "ஒரு வாரத்திற்கு முன்னாடி பார்த்தேன் எவ்வளவோ உற்சாகத்துடன் இருந்தாரே" 'நான் 1-மணிக்கு முன்வரை பேசிக்கொண்டிருந்தேன் இந்த திடீர் முடிவுக்கான அறிகுறி சிறிதும் காணவில்லையே" "ஐயோ போய் விட்டார். ஆம்! பாண்டியனார் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார். ஆனால் அவரின் லட்சியம், சேவை இன்னும் உயிருடன் நடமாடிக் கொண்டு தானிருக்கிறது. அதை நாம் நிறைவேற்றி வைப்பதே பாண்டியனாருக்குச் செய்யும் மரியாதையாகும்.

வி. வி தனுஷ்கோடி,
தூத்துக்குடி-நகரசபைத்தலைவர்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

னேற்றக் கழகத்தில் உறுப்பினராகச் சேர்ந்தார்.

கடைசியாக

கடைசியாக அவர் தென்னிந்திய ஏல விவசாயிகளின் சங்கத்தலைவர் என்ற நிலையில் ஜனவரி மாதம் 16-தேதி சென்னையில் நடைபெற்ற இலவங்கம் விசாரணைக் கமிட்டிக்கு, தென்னிந்திய ஏல விவசாயிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டியுடன் சென்று காப்பி போர்டு போல் ஏலக்காய்க்கும் மத்திய போர்டு ஒன்று ஸ்தாபிக்கவேண்டுமென்றும் அதன்மூலம் ஏலக்காய் உற்பத்திக்கு விசேஷ உதவிகாட்ட வேண்டுமென்றும் விவாதித்தார்—திரும்பினார். நோயால் தாக்குண்டார். நம்மையெல்லாம் கலக்கத்தால் தாக்குற்றுத் தவிக்குமாறு செய்து விட்டு போய்விட்டார்!



1946-ல் மதுரை ஜில்லாபோர்டு தலைவராகயிருந்தபோது, போர்டு உறுப்பினர்களும் அதிகாரிகளும் பாண்டியனாருடன் பி. டி. ராசனும், எஸ். எஸ். ராசனும்.

வரலாறு கூறும் தன்மானக்கழக முதலாவது மாநாட்டிற்கு நம் பாண்டியனார் தலைமை தாங்கிய 1929-ம் ஆண்டுமுதல் கடந்த 24 வருட காலமாக அவர் புகழ் தமிழ் நாட்டில் மிக விரிவாகப் பரவியது. தன்மானக் கழகத்தில் தொண்டரோடு ஒரு தொண்டராகப் பாகுபாடின்றி அவர் செய்த சேவையை ஒரு போதும் மறக்கமுடியாது.

அனுசுயா சின்னசாமி என்ற தோழர்கள் 1935-ல் கலப்பு மணம் புரிந்துகொண்டபோது ஈரோட்டிலும் காஞ்சிபுரத்திலும் எதிர்ப்பு இருந்ததால் பட்டிவீரன்பட்டியில் செந்தில்குமார் நாடார் தலைமையில் நான்கே நாட்கள் முன்னறிவிப்பில் அத்திருமணத்தை 1500 பேர் முன்னிலையில் சிறப்பாக நடத்தி விருந்து வைத்து அதனை ஒரு மாநாடாகவே தம்செலவில் நடத்திவைத்த உதார குணம் உடையவர்.

இந்திய நாடு விடுதலை பெறுவதற்குமுன் ஸ்டாபோர்டுகிரிப்ஸ் என்பார் பிரிட்டிஷாரின் பிரதிநிதியாக வந்து இங்குள்ள அரசியல் இயக்கங்களை எல்லாம் ஆலோசனை கேட்டபோது நீதிக் கட்சியின் சார்பாக நம் பாண்டியனார்தான் நீதிக் கட்சித் தலைவருக்கு உறுதுணையாக டெல்லிமாநகர் சென்று வரத் தகுதி வாய்ந்தவராக பணியாற்றினார்.

1940 ஆண்டில் யாருக்கும் அழைப்பு அனுப்பாது மதுரை மாவட்ட ரிஜிஸ்ட்ரார் அலுவலகத்தில் நாங்கள் பதிவுத் திருமணம் புரிந்துகொள்ளப் போயிருந்த போது அதே காம்பவுண்டுக்குள் ½ பர்லாங்கு தொலைவிலிருந்த மண் ஆராய்ச்சி நிலையத்துக்குத் தற்செயலாக வந்து இறங்கியது அவர்தான் என்று ஐயுறவுடன் நாங்கள் கையைத்தட்டி அழைத்ததும்விரைந்து நடைபோட்டு வந்ததும் அங்கு 5 நிமிடத்தில் நடந்த எங்கள் மண நிகழ்ச்சிக்குத் தலைவராக இருந்து எங்கட்கு மாலை சூட்டியதுமான அவருடைய எளிமையை—உள்ளன்பை நாங்கள் என்றும் மறக்கமுடியாது.

பாண்டியன் அவர்கள் பிரிவினால் அவர் நண்பர்களும், உறவினரும், தொழிலாளிகளும் கலங்கவிடாதவாறு—உறுதி கொண்டு பொறுப்பேற்றுக் கலங்காமல் கடமை புரியும் அன்று சாயந்திரம் சீட்டாட வரச் சொல்லியிருந்தார் ஏமாற்றி விட்டாரே!" என்று இப்படி பலவிதமான பேச்சுக்களே நடந்தது.

நானும் ஒருதடவை ஆஸ்பத்திரியில் பார்த்து வந்தேன். தான் சுகமாகயிருப்பதாகவும் டாக்டர்கள் கட்டாயத்துக்காகவே ஓய்வு எடுப்பதாகவும் சொன்னார். எனக்கு அவர் உறவினர் மட்டுமல்ல உண்மை நண்பர், உயரிய தலைவர், எங்கள் குடும்பத்தில் அவருக்குத் தனி மரியாதை உண்டு. அவர் சொல்லுக்கு யாரும மாற்றுப்பேசுவதில்லை.

பாண்டிய மண்டலத்தில் பாண்டியனாரின் சூறாவளிப் பிரசாரப் பவனி மும்மரமாகயிருந்தது. அவரின் படைவரிசையிலே நானும் ஒருவன். என்னைப்போல் பட்டம் பெற்றவர்கள் ஒரு சிலர் இருந்த காலம் அது. அப்பேர்ப்பட்ட காலத்தில் படித்த கூட்டம், பட்டம் பெற்ற கூட்டம், வர்ணாஸ்ரமக் கூட்டமெல்லாம் வெருண்டோடும் பாண்டியரைக் கண்டு. அப்பேர்ப் பட்ட வல்லவர். அஞ்சா நெஞ்சம் கொண்டவர். ஆற்றல் மிகுந்தவர். மனதில் சரியென்றுபட்டதை துணிந்து காரியமாற்றுபவர். தயவு தாட்சண்யத்திற்கு கட்டுப்படாதவர். அறிவுத்திறமை படைத்தவர். இப்பேர்ப் பட்ட மலை சாய்ந்து விட்டது. நம்மை விட்டுப் பிரிந்து விட்டார். நம் எல்லோரையும் கண்ணீர் வடிக்கச் செய்து விட்டு மீள முடியாத இடத்திற்குப்

பாண்டியன் அவர்களின் மறைவுச் செய்தி தமிழ் நாட்டைப் பெரிதும் கலக்கிவிட்டிருக்கிறது. அவர்களின் சீரிய தலைமையில் சுயமரியாதை இயக்கம் அடைந்த வலுவையும் பயனையும் அளவிடமுடியாது. சுயமரியாதை இயக்கத்தின் ஆரம்ப காலம், படித்தவர்கள், பணம்படைத்தவர்கள் மடாதிபதிகள், சர்க்கார் ஆகிய அனைவருடைய பலத்த எதிர்ப்பைத்தான் சம்பாதித்து விட்டிருந்தது. அந்தக் காலம் 'நான் சுயமரியாதைக்காரன்' என்று சொல்லிக் கொள்ளவே அசாத்தியதுணிச்சல் தேவைப்பட்டது. அந்த நேரத்தில் இயக்கத்தின் முன்னணியில் நின்று பிரச்சாரத்தில் ஈடுபட்டு நாடு முழுவதும் சுற்றிய பெருமையில் பெரும் பங்கு பாண்டியன் அவர்களையே சாரும். அதன் பயன் முழுவதையும் இந்தக் காலத்தில் இயக்கம் பெற்றுக் கொண்டிருக்கிறது.

அவரது நெறிதவறா வாழ்க்கையும், நேர்மையும், நெஞ்சுறுதியும் இன்றும், பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள இளைஞர்களுக்குளர் உன்னதமான பாடம்.

இடையில் பெரியாருடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமையின் காரணமாகப் பொது வாழ்வையே வெறுத்து ஒதுங்கி வாழ்ந்திருந்த அந்த உத்தமரின் உள்ளம் திராவிட முன்னேற்றக் கழகப்பணிகளில் நம்பிக்கை கொண்டது மட்டுமல்ல, கடந்த ஓராண்டுக் காலத்தில் தென் மாவட்டங்களில்கழகப் பணிகளுக்கு அவர் அளித்த பாதுகாப்பும், உற்சாகமும் அவரது அரிய தொண்டு மீண்டும் நாட்டுக்கு முழு அளவில் கிட்டும் என்ற நம்பிக்கையை நமது உள்ளங்களில் உண்டாக்கி விட்டிருந்தது. இந்தச்சமயத்தில் அவருக்கு ஏற்பட்டமுடிவு குறிப்பாக தி. மு கழகத்திற்கு ஈடுசெய்ய முடியாத பெரும் இழப்பாகும்.

அவரை நினைந்து, அவர் வாழ்வில் கொண்ட பண்புகளைநினைந்து அவர் காண விரும்பிய நாட்டை அமைப்பதில் முனைவோம்.

ஈ. வெ. கி. சம்பத்

11—2—49-ல் நாடார் மகாசன சங்க ஆதரவில் நடைபெற்ற விதவா விவாகக் காட்சி, இது! சுயமரியாதைத் தலைவர், இதுபோல முன்னின்று நடத்திய புதுமைத் திருமணங்கள் ஏராளம்!!

பெரியப்பா! பிரிந்தீரே, எமைவிட்டு?

திராவிடநாட்டு மக்கட்கு, பாண்டியனாராகவும், ஏனையோர்களுக்குப் பாண்டியனாகவும் இருந்த என் பெரியப்பா, எனக்கு, என் தகப்பனாரைவிடப் பன்மடங்கு மதிப்பு வாய்ந்த பெரியய்யாவாக விளங்கினார். என் இருபத்தினான்கு வருஷத்திய அனுபவத்தில் அவருடன் நான் கழித்த நாட்கள் கனவுபோல் இரவு பகலாக மனதில் தோன்றித்தோன்றி உறுத்துகிறது. அதுவும் கடந்த ஒரு வருடகாலமாக, அவருடன் நெருங்கிக் கழிந்த பொன்நாட்கள் உயிருடன் வாட்டுகிறது. "என்ன தம்பி தோட்டத்திற்கு போகலாம்" என்பார். இருவரும் காலை 6 மணிக்குக் கிளம்புவோம். ஒவ்வொரு தோட்டமாகப் பார்த்து, ஒவ்வொரு வகை, பயிர் செடிகள் போட்டுள்ள இடங்களையும் சுற்றிக் காண்பித்து பறவை இனங்கள், தன் குஞ்சுகளுக்கு, உணவு ஊட்டுவதுபோல் பக்குவமாக, விவசாயமுறைகளை என் மனதில் தினந்தோறும் ஊட்டிவிடுவார். அளவுக்கு மீறிய உழைப்பே அவருடைய மறைவுக்குக் காரணம்.

அவர் செய்யும் காரியம் தப்புஎன நாம் நினைத்தால் நம்மை, திட்டமாட்டார், கோபிக்கமாட்டார். தான் ஏன் அக்காரியத்தை செய்கிறார் என்பதை விளக்கிடுவார். உதாரணமாக ஒரு தோட்டத்தில் மூலதனம் செய்வதை நான் விரும்பவில்லை. தோட்ட மேற்பார்வையாளரிடம் அசிரத்தை காட்டினேன். கண்டார் பெரியப்பா; கூப்பிட்டார். காரில் ஏறச்சொல்லி—என்னை உதைக்கப் பாத்தியதை உடையவர்—தோட்டத்திற்கு கூட்டிச் சென்றார். வேலை செய்யவேண்டியதின் அவசியத்தை விளக்கினார். என் குற்றத்தை உணரச் செய்தார்; உணர்த்தினார்.

கடைசி முறையாக நான் அவரை ஜனவரிமாதம் 22-ந்தேதி மதராசில் தீனதயாள அண்ணன், பாஸ்கர அண்ணன், பொன்னம்பலனாருடன் பார்த்தேன். முதலில் எப்பொழுதும்போல் எங்களைப் பார்த்துச் சிரித்தார். பின் என்ன தம்பி உன் உடம்பு, நான் ஊரிலில்லாமல்பழையபடி கெட்டுவிட்டதா என்றார். பொன்னம்பலனாரிடம் தம்பிக்கு, என் பக்கத்தில் கட்டில் போட்டு வைத்தியம் செய்தால்தான் அவன் ஒழுங்காக இருப்பான்; அவனை இங்கேயே வைத்துக்கொள்ளவேண்டும் என்றார். ஆனால் இருக்க வைத்தாரா? நீங்கள் எல்லோரும் ஊருக்குச்சென்று வேலைகளைக் கவனியுங்கள் என்று அன்று சாயந்தர ரயிலிலேயே அனுப்பிவிட்டார். தான் 15 தினங்களில் வருவதாகக் கூறினார். ஆனால் ஒரு மாதம் கழிந்து பேசாத பெரியப்பாவாக, வந்து எங்களை மீளாத்துயரத்தில் ஆழ்த்திவிட்டுச் சென்றுவிட்டார்.

திராவிடநாடு தலைவரை இழந்து தவிக்கிறது. நாங்கள் குடும்பத் தலைவரை இழந்து யாதுசெய்வது? என் செய்வது? என இரத்தக் கண்ணீர் சிந்துகிறோம். நாங்கள் அவருக்கு செய்யும் பணி, நாங்கள் ஐவரும், என் தகப்பனார், சொற்படி கேட்டு என் பெரியப்பா வாழ்க்கையில் கொண்ட குறிக்கோளை கடைப்பிடிப்போம். நாங்கள் அவர் பெயருக்கு இழுக்கு ஏற்படும் வகையில் காரியங்கள செய்யமாட்டோம். என்று உறுதி கூறுகிறோம்.

W. P. A. R. நாகராசன்,
பட்டிவீரன்பட்டி.

அன்புவழி சென்றார் இதயமெல்லாம் நிறைந்தார்!

மனிதன் மனிதனாக மதிக்கப்படவேண்டுமானால், நம் நாடு பிற நாட்டாரால் வலிமை நிறைந்த நாடென்று பாராட்டப்படவேண்டுமானால், திரு. பாண்டியனாரின் பண்பாட்டைப் பின்பற்றி நடப்பதைத் தவிர வேறு வழி இல்லை. இது என்னுடைய திடமான நம்பிக்கை.

நான் வேறு அரசியல் கட்சியைச் சார்ந்தவன். அவர் வேறு அரசியல் கட்சியைச் சார்ந்தவர். ஆனால், எங்களிடையே பூத்திருந்த தோழமை கண்ணியம் நிறைந்தது. மரியாதை மலிந்தது; என்றும் பிரிக்கமுடியாதது. பல அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் அரசியல் சார்பற்று ஆக்க வேலைகளை மக்களிடையே அன்பின் அடிப்படையிலே செய்யலாம் என்று என் போன்றவர்களுக்கு எடுத்துக்காட்டியவர் திரு. பாண்டியன். அவரோடு இருபது ஆண்டுகள் இணைந்து சேவை செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவரின் பண்பாட்டை அரசியல் கட்சி அன்பர்கள் பின்பற்றுவார்களானால் அவர்களிடையே அன்பின் மணம் கமழக் காணலாம்.

திரு. பாண்டியன் சிறைந்த மனம் படைத்தவர். எவருக்கும் தீங்கு செய்யக் கருதியதை நான் கண்டதில்லை. அவரைத் திட்டியவர்கள், கேடு செய்யத் திட்டமிட்டவர்கள், தங்களுக்குத் துன்பம் நேர்ந்த பொழுது அவரை அணுகி இன்பம் பெற்றார்கள். இவர்களில் பலரை நானறிவேன். எத்தனை பேர்களுக்கு தன் இல்லத்தில் அடைக்கலம் தந்தார். எவ்வளவு பேர்களுக்கு ஓடோடி உதவி செய்தார், தன சொந்தச் செலவிலே. இவைகளெல்லாம் என் மனக்கண்முன் காட்சியளிக்கின்றன.

சிற்றூர்கள் பலவற்றிற்குச் சேவை செய்யச் சென்றிருக்கிறேன் செம்மல் திரு. பாண்டியனாரோடு எளியவர்களுக்கு வாழ்வளித்தார். வலிமையற்றவர்களை வீரர்களாக்கினார். இன்று கண்ணீர்விட்டுக் கதறியழும் அவர்களுக்கு அஞ்சேல் என்று கூற யார் இருக்கிறார்கள்? தேம்பித்தேம்பி அழுது செயலற்று நிற்கும் அவர்களுக்குத் தேறுதல் சொல்ல யார் இருக்கிறார்கள்? இதை எண்ணும்போது என் நெஞ்சம் பதறுகிறது.

என் மதிப்பிற்குரிய தலைவர் திரு. ஊ. பு. அ. சௌந்தரபாண்டியன் இறக்கவில்லை, மறையவில்லை. இறந்தார் என்று எண்ணுவதோ, மறைந்தார் என்று மனதால் நினைப்பதோ துரோகம். அத்துரோகத்தைச் செய்ய நான் துணியமாட்டேன். எந்தச் சக்தியாலும் மக்களிடமிருந்து அவரைப் பிரிக்கமுடியாமல் சேவையின் துணைகொண்டு மக்களோடு அவரைப் பிணைத்துவிட முயல்வேன். வாழ்க பாண்டியன்.

ப. ரா. முத்துச்சாமி,
நாடார் மகாஜன சங்கப்
பொதுச்செயலாளர்,
மதுரை.

பட்டிவீரன்பட்டி உயர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் திடீரென மறைந்தது கேட்டுத் திடுக்குற்றேன். தென்னிந்திய நாடார் சமூகத்திற்குமட்டுமன்றி, தமிழ் மக்கள் அனைவருக்குமே சிறந்த தலைவராய்—வழிகாட்டியாய் விளங்கிவந்தார். அவரின் மரணம் அவரது குடும்பத்திற்கும், நாட்டிற்கும் சுலபமாய் ஈடு செய்துகொள்ள இயலாததாகும்.

அவரது மறைவால், விவசாய—வர்த்தக உலகமும் நஷ்டப்பட்டிருக்கிறது. அவரைப் போன்ற அரிய மனிதரை நாம் இனிக் காண நேருமா என்றும் சந்தேகிக்கிறேன். அவ்வளவு இனிய-அரிய பிறவியை அற்ப ஆயுளில் பிரிந்து வாடும் அவரது சகோதரர், மனைவி, மக்கள், மருகருக்கும், என் சார்பிலும், குடும்பத்தார் சார்பிலும் அனுதாபம் கூறிக்கொள்ளுகிறேன்.

டாக்டர் இ. பி. மதுரம். M. P.

காஞ்சியின் மரியாதை

காஞ்சி நகராட்சி மன்றத்தினர் மாவீரர் பாண்டியனாரின் மறைவு குறித்து 28-2-53 முனிசிபல் கவுன்சில் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றி இரண்டு நிமிட நேரம் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர்.

பெரியார் துக்கம்

உண்மையான உள்ளம், உறுதியான நெஞ்சு எடுத்த காரியத்தில் வெற்றி காணவேண்டும் என்கின்ற ஆர்வம் முதலிய அரிய உயர்குணங்கள் அவரிடம் இருந்தன.......

மற்றும் அவரது மக்கள் தம்பி மக்கள், மனைவியார் முதலியோரிடமும் பரிவும் அன்பும் உண்டு இப்படிப்பட்ட ஒரு குடும்பத்திற்கு இப்படிப்பட்ட பரிகரிக்க முடியாத ஒரு துக்கசம்பவம் நேர்ந்தது மிகவும் துக்கிக்கத்தக்க சம்பவமேயாகும். எனது உண்மையும் உணர்ச்சியும் உள்ள ஆழ்ந்த அனுதாபத்தை அவரை இறக்கவிட்டுத் தவிக்கும் அவரது குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும், நண்பர் தொண்டர்களுக்கும் அறிவித்துக்கொள்கிறேன்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பினரால் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரச் செய்தார்கள். இதைக்கேட்டவுடனே "என்னைப் போன்ற யோக்கியர்களுக்கும் நேர்மையானவர்களுக்கும் இந்தப்போர்டில் வேலையில்லை" என்று இராசிநாமா எழுதிவைத்துவிட்டு வெளியேறிவிட்டார். இத்தகைய வீரச் செயல் இதற்குமுன்பும் நடந்ததில்லை. அதற்குப்பின்பும் நடந்ததில்லை. சுப்பராயன் மந்திரிகாலத்தில்தான் முதன்முதலில் செங்கற்பட்டிலே சுயமரியாதை மகாநாட்டைப் பெரியாரவர்கள் கூட்டிவைத்தார்கள். முதலமைச்சர் சுப்பராயன் திறந்துவைக்கக் குறடா பாண்டியனார் தலைமை வகித்தார். யானும் கலந்துகொள்ள நேர்ந்தது. அடுத்த ஆண்டில் ஈரோட்டில், பம்பாய் எம். ஆர், செயக்கர் தலைமையில் நிகழ்ந்த மகாநாட்டிலும் பங்கெடுத்துக் கொண்டோம். மறு ஆண்டில், விருதுநகரில் ஆர். கே. சண்முகம் செட்டியார் தலைமையில் நடந்த மகாநாட்டிற்குப் பாண்டியன் வரவேற்புத் தலைவராகவும், யான் செயலாளராகவும் பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்தது, பெரியாருடன் ஒரு மனப்பட்டுச் சுயமரியாதை இயக்கத்தில் சவுந்தரபாண்டியன் ஆற்றிய பிரச்சாரங்களும், சொற்பொழிவுகளும் செயல்களும், தமிழகத்திலே சீர்திருத்தத் துறையிலே புரட்சி வேகத்தை உண்டாக்கிவிட்டது என்று சொல்லலாம்.

1931—ம் ஆண்டில் மீண்டும் நீதிக்கட்சி முனிசாமி நாயுடு தலைமையில் அமைச்சர் அவை ஏற்பட்ட காலத்தில், சவுந்தரபாண்டியன் மறுமுறையும் சட்டசபையில் அங்கம் பெற்று அரும்பணியாற்றி வந்தார்.

1945—ம் ஆண்டில் சேலத்தில நடந்த மாநாட்டிற்குப் பின்னர் ஒதுங்கி நிற்க வேண்டிய கட்டம் ஏற்பட்டவுடன் பொதுவாகச் சீர்திருத்தக் கொள்கைகளைப் பரப்புவதிலும், குறிப்பாகநாடார்மகாசன சங்கஅலுவல்களிலும் பெரிதும் ஈடுபட்டு உழைத்து வந்தார்.

சென்ற சனவரித் திங்கள், 14-ம் நாள் இருவரும் சென்னைக்கு உடன் சென்றோம் ஆந்திரப் பிரிவினை விசயத்தைப்பற்றியும், பின்னால தமிழகத்திலே காங்கிரசுக்கு எதிராக ஒரு அரசியல் கட்சி உருவாகவேண்டுவதைப்பற்றியும்சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொண்டு வந்தார். அவர் கூறிய வார்த்தைகள் இன்னும் காதுகளில் ஒலிக்கின்றன! ஆனால், அந்தோ! அவர் இல்லை! நம்மிடை இல்லை,! போய்விட்டார்!!

வே. வ. இராமசாமி.

12—12—50ல் தென்னிந்திய ஏல உற்பத்தியாளர் மாநாடு. முன்னாள் முதலமைச்சர் குமாரசாமி ராஜா, பக்தவத்சலம் ஆகியோருடன், பாண்டியனார்.

காஞ்சிபுரத்தில்

காஞ்சி—கலியாணசுந்தரம் மகன் திருமணத்துக்காக 2—7—52-ல் காஞ்சி வந்தார். 'இனி, தி. மு. கவுக்காக என்னுலியன்றளவு பாடுபடப் போகிறேன்' என்று வெளியிட்டார். 'திராவிட நாடு' அலுவலகத்தில், தங்கி, இயக்கத் தோழர்களோடு, அளவளாவினர். ஆனந்தம், தந்தார்! 'தினசரி இதழ் நடத்த, ஏன் தயக்கம்?' என்றார் 'என்னுலான உதவிகளைத் தருகிறேன்' என்று தெரிவித்தார். அந்தோ! ஆர்வமும் ஆசையும் கலந்தூட்டிய அன்புக் குன்று! அணையாத பகுத்தறிவு ஜோதி! தமிழர் பெட்டகம்! தன்மானத் தலைவர்! இன்று, எங்கே? எங்கே?—என்று, தவிக்கிறோம். கண்ணீர்தான் பதிலாகக் கிடைக்கிறது!

1-ம்பக்க தொடர்ச்சி

பாண்டியனரின் பெரும்உழைப்பு பயன்பட்ட வகையினை எண்ணும்போது — அந்தோ — எவ்வளவு பெரிய துணையை இழந்துவிட்டோம் என்ற எண்ணம். நெஞ்சைத் துளைக்கிறது.

எங்கே எதிர்ப்பு அதிகமோ, எங்கே கனதனவான்களும், கனபாடிகளும் ஒரே முகாம் அமைத்து பகுத்தறிவு இயக்கத்தின்மீது கலித்தனத்தை ஏவினரோ, எங்கே கொலை செய்யவும் துணியும் கொடியவர்கள் கோவிந்த நாம சங்கீர்த்தனக் கும்பலுக்காகப் பரிந்து பேச, நம்மைக் கண்டபடி ஏசக் கூடினரோ, அங்கெல்லாம், பாண்டியன் வருவார், புன்னகை தருவார், வீரம் அரசோச்சும்; வெற்றி, மாலை சூட்டும்; பகுத்தறிவு பவனி வரும்.

'பயல்களைச் சுட்டுத் தள்ளி விடலாம்—ஆனல் பாண்டியன் வந்து தொலைந்தானே......என்ன செய்வது......'' என்று பேசி நழுவாத அரசியல் அக்ரமக்காரன் கிடையாது, பாண்டிய மண்டலத்தில்.

''கொடி மரம் நாட்டக் கூடாதாம்—கொடுவாள் தூக்கிக் கொக்கரிக்கிறார்கள்''

''யார்? ஏன்? எப்போது?''

''ஊர் பெரியதனக்காரர்? கூட்டம் போட்டோம், கடந்த ஞாயிறு.''

''சரி'' அடுத்த ஞாயிறு கூட்டம். நான் வருகிறேன். அஞ்சாமல், அமைதியாக இருங்கள்''

பாண்டியனருக்கும் சுயமரியாதை இயக்க துவக்க காலத் தோழருக்கும் இதுபோல உரையாடல் நடைபெறும் அடுத்த ஞாயிறு, கொடி கெம்பீரமாகப் பறக்கும், கூட்டம் சிறப்புற நடைபெறும். பாண்டியன் நமது பாதுகாவலர். சுயமரியாதை இயக்கத்தின் படைத்தலைவர்! அவருடைய சொல்லே, முரசு! அவருடைய கண்ணொளியே, எதிரியைத் துளைக்கும் கணை! அத்தகைய வீரப் பணி புரிந்தவர், பாண்டியன் — நாம் மறந்துகூடப் போயிருப்போம் பலப்பல சம்பவங்களை, சுயமரியாதை இயக்கத்தின் பகைவர்கள், மறந்திட முடியாது. அந்த மாவீரன், சுயமரியாதை இயக்கத்தை அவ்வளவு ஆற்றலுடன், கட்டிக்காத்து வந்தார்.

பணம் அவர் காலடியில் குவிந்தது—ஆனல் படாடோபம் அவரைக் கண்டு உறவாடப் பயந்தது.

ஆற்றல் அவரிடம் நிரம்ப இருந்தது, ஆனல் ஆதிக்கமோகம் அவரை அண்ட அஞ்சியது.

செல்வமும் செல்வாக்கும் அவருக்கு ஏராளம், செருக்கு அவரைத் தீண்டியதில்லை.

பண்புகளின் பெட்டகமாய் விளங்கிவந்தார்.

ஏழையின் கண்ணீரைக் காணச் சகியாத உளம் படைத்தவர்.

செல்வரின் செருக்கைக் கண்டால் சினம் கொள்ளும் வீரர்.

உழைப்போர் உடனிருப்பதில் உவகை கொண்டவர்.

உல்லாசபுரியினரின் தொடர்பு அவருக்கு எட்டி.

அவர், நாம்யாரும் அடைய முடியாத செல்வத்தைப் பெற்றிருந்தார், ஆனல் நம்மோடு இருப்பதையே பெருமை என்று கொண்டார்.

எவ்வளவு கனிவுடன், கொஞ்சுமொழியில் கூறுவார், ''நமது பிள்ளைகள்'' என்று! அதைக் கூறும்போது அவருடைய அகமலர்ச்சியை அழகுற முகப்பொலிவு எடுத்துக் காட்டுமே! அந்த ஓவியத்தை அல்லவா, மரணம் அழித்து விட்டது!

இயக்க ஊழியர்களிடம் அவர் காட்டிய பரிவு, எவ்வளவு!

வறுமைத் தேள் கொட்டினல், மருந்திடுவார்.

உழைப்பால் உடல் நலிந்தால், அன்பு மொழியாலும், ஆதரவாலும் மருத்துவ உதவிக்கு வழிதேடியும், தேற்றுவார்.

சலிப்பு கொண்டவர்களுக்கு உற்சாகமூட்டுவார். சந்தர்ப்பவாதிகளை விரட்டுவார்—ஒன்றல்ல இரண்டல்ல அவராற்றிய அரும் பணிகள்.

நான் பொதுவாழ்க்கையில் ஈடுபட்ட நாள் தொட்டு, என் மனதை வெகுவாகக் கவர்ந்தவர் பாண்டியனர்.

அச்சமற்று அவரிடம் பழகுவேன், பேசுவேன், யோசனைகள் கூறுவேன், கடிந்து கொண்டுமிருக்கிறேன், ஆனல் எப்போதும் அவரைக் கண்டால் தனியானதோர் மகிழ்ச்சி, காணுதபோதும் எண்ணி எண்ணி மகிழ்வதுண்டு.

ஆபத்து, இடுக்கண், பகை — இவைபற்றிய 'சேதி' கிடைக்குபோதெல்லாம் 'பாண்டியன்' என்று எண்ணிக்கொள்வோம் — பயம் போய்விடும் அவ்வளவு நெஞ்சுரம் தரும் சொல் — பாண்டியன் என்ற பெயர்! அவ்வளவு ஆற்றலுக்கு உறைவிடம், அவர். அவ்வளவு எளிதில் அவர் உதவியைப் பெறமுடியும். தொண்டர்கள் அண்ணாந்து பார்த்தாலும் அவர்களின் கண்ணுக்குத் தெரியாத உயரத்திலே தாவிச்சென்று கோலாகலமாகக் கொலுவீற்றிருக்கும், தலைவர்கள் நிரம்பியிருந்த நாள் அது, அந்த நாட்களிலே, எங்களுக்கெல்லாம் கிடைத்த 'தோழர்' சௌந்தர பாண்டியன். அவரை இழந்துவிடுவதென்றால்,............

சேலம்—நமக்கும் பாண்டியனருக்கும்இருந்துவந்த 'தொடர்பை' ஓரளவுக்கு வெட்டிவிட்டது, என்பதுதான் அனைவரும் அறிவர் — ஆனல், அந்தத் 'தொடர்பு' கெடக்கூடாது என்பதற்காக அவர் எவ்வளவு பாடுபட்டார் என்பது ஒரு சிலருக்குமட்டுமே தெரியும்.

அவர் அதுபோது மதுரைமாவட்ட ஆட்சி மன்றத் தலைவர்.

திறம்பட நிர்வாகம் நடத்திய அனுபவமும் உள்ளவர்.

சட்டசபையிலே இருந்து, சட்ட நுணுக்க அனுபவமும் பெற்றவர்.

தன்னலமற்றவர், எனவே அவருடைய அரும்பணி மக்களுக்கு, நேர்மையான நிர்வாகத்தைத் தந்து வந்தது.

சுயமரியாதை இயக்கத்திலே தளராது பற்றுகொண்டவர்கள், நிர்வாக இடங்களிலே அதிகம்பேர் கிடையாது—அதிகம் பேர்களா—விரல் விட்டுக்கூட எண்ணமுடியாது! பாண்டியன் ஒருவர்தான் இருந்துவந்தார்.

சேலம்—பதவிகளை நம்மவர்கள் விட்டுவிட வேண்டும் என்ற திட்டம் உருவான இடம்.

தீர்மானம் தீட்டினவன், நான்—பத்திரிகையில் குறிப்பு வெளியிட்டேன்—மாநாட்டுக்கு முன்பே!

''அன்புள்ள அண்ணாத்துரை, பத்திரிகையில் உன்னுடைய வெடிகுண்டு பார்த்தேன். நான் தயார்'' என்று கடிதம் விடுத்தார், அந்தக் கொள்கை வழுவாக் கோமான்.

அதுமட்டுமல்ல! இயக்கத்திலே பலர் அறியார், பிறகு நடந்ததை. பதவியை விட்டுவிடத் துணிந்தார். ''ராஜிநாமா''க் கடிதமே எழுதி, எனக்கே அதை அனுப்பி, சர்க்காருக்கு அனுப்பிவிடவும் அனுமதி தந்தார்! ஆக, அவர் பதவியைத் துறக்க மனமின்றி, இயக்கத் தொடர்பை வெட்டிக்கொண்டுவிட்டார், என்று எவரேனும் எண்ணினல், அவர்கள் முழு உண்மை தெரியாதவர்கள் என்றே பொருள். ''ராஜிநாமாவை'' அமுலுக்குக் கொண்டுவருவதற்குள், கட்சியின் நடைமுறைகளுக்கான சில நிபந்தனைகளை அவர் விதித்திருந்தார்—யார் மீதும் குற்றம் கூறுவதல்ல இது—அப்போது அந்த நிபந்தனைகள் செயலாக முடியவில்லை, பிறகே ''ராஜிநாமா'' நடைபெறவில்லை, அவரும், தொடர்பைத் தளர்த்திக் கொள்ள நேரிட்டது.

இயக்கத்திலே இரண்டறக் கலந்திருந்த பாண்டியனர், சில ஆண்டுகள் இங்ஙனம் ஒதுங்கினர், என்றாலும், திராவிட முன்னேற்றக் கழகம், நல்ல அமைப்பு முறையுடன் மலர்ந்ததும், மனமுவந்து வரவேற்றதுடன், ஓராண்டுக்கு முன்பே, உறுப்பினராகவும் சேர்ந்து, பணி புரியத் தொடங்கினர்—பூரித்துக் கிடந்தேன்—திராவிடச் சமுதாயம் தேம்பித் தவிக்கத் தவிக்க, நமக்குக் கிடைக்க இருந்த கரு ஊலத்தை இழந்து விட்டோம்.

சில திங்களுக்கு முன்னம், மதுரையில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் பாண்டியனர் தலைமைதாங்கிய காட்சி கண்முன் நிற்கிறது, பேசிய வீர உரை காதிலே ஒலிக்கிறது. ஆனல், அந்தோ! அவர் இறந்து பட்டார்—மறைந்து போனர். என்செய்வது! எதை எண்ணுவது, எதை மறப்பது. ஆறுதல் பெற வழிதான் ஏது?

ஒரே ஒரு வழி உண்டு—ஆறுதல் பெற, மனப்புண்ணைப் போக்கிக் கொள்ள. அவர் இறந்தார், இறந்துபட்டார் என்பதை இனி மறப்போம்—அவர் இறந்தார் என்பதல்ல இனி நாம் கூறவேண்டிய பேச்சு—அவர் நம்மோடு கலந்துவிட்டார். அவருடைய பண்புகளை ஆற்றலை, அறிவுத்திறனை, நமக்குத்தான் அளித்துச் சென்றிருக்கிறார்—எனவே அவர் நம்மோடு கலந்துவிட்டார், என்றே கொள்ளவேண்டும். அவர் காட்டிய பாதையில் நாம் நடந்துசெல்லுவதும், நம்மைப் பிறர்பார்த்து ''இவர்கள் அந்தப் பாண்டியன் படையினர்'' என்று கூறுவதும்தான், நாம் செய்யவேண்டிய கடமை.

நமது செயல்மூலம் அவர் நம்மோடு இருக்கிறார் என்பதை எடுத்துக் காட்டவாரீர் என்று, அழைக்கிறேன். கண்ணீரைத் துடைத்துக்கொண்டு கடமையாற்ற வாருங்கள் என்று அழைக்கிறேன்.

பாண்டியனை இழந்து தவிக்கும் அவர் குடும்பத்தினருக்கு. என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைச் செலுத்துகிறேன்—இயக்கம் செலுத்துகிறது.

ஒப்பற்ற பாண்டியனரின் குடும்பம், சுயமரியாதை உலகின் எழிலோவியம். பாண்டியனரின் பண்புகளை அந்தக் குடும்பம், தொடர்ந்து இயக்கத்துக்கு அளித்துவரும் என்று நம்புகிறேன்.

நாமும், மாவீரனின் பண்புகளைச் செல்வமாகக்கொண்டு, வழி நடப்போம், பகை முடிப்போம். திராவிடம் காண்போம் — என்று சூளுரை கூறிக்கொள்வோம், கண்ணீரைத் துடைத்துக்கொண்டு கூறுவோம் நாட்டினருக்கு, ''பாண்டியன் படைவரிசை இதோ! பெரியதோர் இழப்புக்குப் பிறகு, தாங்கொணுத் துயரைத் தாங்கிக் கொண்டு, அவர் செய்து வந்த அரும் பணியினைத் தொடர்ந்து செய்யும் படை இதோ!'' என்று கூறுவோம், வாரீர்.

பாண்டியன் மறைந்தார்—மன்னிக்கவும் — பாண்டியன் நம்மோடு கலந்து விட்டார்.

அண்ணதுரை.



Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.